வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.09.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 265 | பக்கங்கள் : 16

# தொல்பொருள் திணைக்களம் கட்டளையை மதிக்கவில்லை!

## முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்று தீர்ப்பு

முல்லைத்தீவு, செப்ரெம்பர் 01

குருந்தூர்மலை விடயத்தில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் முன்னர் வழங்கிய உத்தரவுகளை மதிக்காது நிர்மாண பணிகள் நடைபெற்றுள்ளன. தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நீதிமன்றத்தின் கட்டளைகளை மதித்து நடைமுறைப்படுத்தவில்லை என்று முல்லைத்தீவு நீதிவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பொலிஸாரும் தமது கடமைகளை நிறைவேற்றவில்லை என்றும் நீதிவான் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு - குருந்தூர்மலையில் நீதிமன்றின் கட்டளையைப் புறக்கணித்து அமைக்கப்பட்ட விகாரை தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது ஆலய நிர்வாகம் சார்பிலே முல்லைத்தீவு மாவட்டத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் முன்னிலையாகினர்.

தொல்லியல் திணைக்களம் சார்பாக தொல்லியல் திணைக்களத்தின் வவுனியா - முல்லைத்தீவு - மன்னார் மாவட்டங்களின் உதவி பணிப்பாளர் இந்த வழக்கில் நேற்று முன்னிலை

11

# பொலிஸ் அதிகாரம் வழங்கப்படக்கூடாது

## ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார

கொழும்பு, செப். 01

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கக்கூடாது. இது வடக்கில் அல்ல தெற்கிலேயே பிரச்னையாக அமையும் என்று கூறியிருக்கிறார் ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க.

இலங்கையில் பொலிஸ் என்பது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ)

(விரிவான செய்தி பக்கம் 06)

# புற்றுநோயின் தாக்கம் நாட்டில் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, செப். 01

புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை நாட்டில் சடுதியாக அதிகரித்துள்ளது என்று தேசிய புற்றுநோய் நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தவறான உணவுப் பழக்கவழக்கங்கள், சுற்றாடல் பாதிப்புகள், வெற்றிலை போடுதல், புகைத்தல், மதுபானம் அருந்துதல் போன்ற

11

# கொக்குத்தொடுவாய் புதைகுழி; செவ்வாய்க்கிழமை அகழப்படும்!

முல்லைத்தீவு,செப். 01

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை எதிர்வரும் 5ஆம் திகதி - செவ்வாய்க்கிழமை மீண்டும் அகழ்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற விசேட வழக்கிலேயே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று நடந்த விசேட வழக்கில், முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி எஸ். பிரணவன், சட்டத்தரணிகளான எம். ஏ. சுமந்திரன், வி கே. நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, வி. எஸ். தனஞ்சயன் , காணாமல் போனோர் தொடர்பான பணிமனையின் சட்டத்தரணிகளான எஸ். துஷ்யந்தினி, ஜெ. தர்பரன், முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ம. செல்வரட்ணம்,

11

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி; இலங்கையின் முன்னேற்றத்துக்கு உதவும்!

## ஐ. நா.வின் வதிவிட பிரதிநிதி

கொழும்பு, செப். 01

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குறித்த பாரம்பரியத்துக்கு தீர்வைப் காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை. முன்னேற்றம், பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் மிகவும் அவசியமானது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

உலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை குறிக்கும் நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை இந்த ஈவிரக்கமற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் - தங்கள் அன்புக்குரியவர்கள் எப்படி உள்ளனர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய

11

### கொக்குத்தொடுவாய் புதைகுழி விவகாரம்:

# சட்டத்தரணிகளுக்கு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக முறையீடு

முல்லைத்தீவு,செப். 01

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகளில் பங்கு கொள்ளும் சட்டத்தரணிகளுக்கு புலனாய்வு பிரிவினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது

நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிபதி த. பிரதீபன் முன்னிலையில் நடந்த வழக்கு விசாரணைகளின் போது இந்த விடயத்தை சட்டத்தரணிகள் நீதிபதியின் கவனத்துக்குக்

11

### எரிபொருட்கள் விலை திருத்தம்:

# பெற்றோல் ரூ. 13 அதிகரித்தது ஓட்டோ டீசல் ரூ. 35 குறைந்தது

கொழும்பு, செப். 01

பெற்றோலின் விலை லீற்றருக்கு 13 ரூபாயாலும் மண் ணெண்ணெய் 5 ரூபாயாலும் அதிகரித்துள்ளன. ஓட்டோ டீசலின் விலை லீற்றருக்கு 35 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலைகள் நள்ளிரவு முதல் நடை முறைக்குவரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டன.

11

# வட, கிழக்கின் நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!

## அமெரிக்க செனட் உறுப்பினரிடம் சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து!

வவுனியா, செப். 01

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். 13ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று அமெ ரிக்க செனட் சபை உறுப்பினரிடம் தாம்

11

# இலங்கையிலிருந்து கடத்திய 15 கிலோ தங்கம் பறிமுதல்!

இராமநாதபுரம், செப். 01

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு கடத்தப்பட்ட சுமார் 15 கிலோ தங்கக் கட்டிகளை இந்தியாவின் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினர் கைப்பற்றி யுள்ளனர்.

இலங்கையில் இருந்து தனுஷ்கோடி வழியாக தங்கம் கடத்தி வரப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து இராமநாதபுரம் கடற்கரை பகுதியில்

11

# சீன எரிபொருள் நிறுவனம் விநியோகத்தை ஆரம்பித்தது!

கொழும்பு, செப். 01

சீனாவின் சினோபெக் எரிபொருள் நிறுவனம் நேற்று முதல் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்தது. இந்த நிறுவனத்தின் கீழ் கொழும்பு - மத்தேகொடை எரிபொருள் நிரப்பு நிலையம் தனது பணியை தொடங்கியது.

தனது சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும்

11

## இப்படியும் நடக்கிறது

ஒரு பிரச்னை தீவிரமாகப் பேசப்படுவதும் சில நாட்களில், புதிய ஒரு பிரச்னை வந்ததும் அதனைப் பற்றியே பேசுவதும் நமக்குப் பழக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு புதிய பிரச்னை வந்ததும் பழைய பிரச்னையை நாம் மறந்தே போய்விடுகின்றோம். அதற்காக அந்தப் பிரச்னை முடிந்துவிட்டது என்பதல்ல.

இந்த வகையில் தமக்கு எதிரான பிரசாரங்களை - ஆளும் தரப்பினர் புதிய புதிய பிரச்னைகளை தாமே உருவாக்கி - தமது பிரச்னைகளை மறக்க பண்ணுவதும் நமக்குப் பழகிப்போன ஒன்றுதான்.

இப்போதெல்லாம் நமது பிரச்னை இந்த மத விவகாரம் தான். தொல்பொருள் திணைக்களம் எமது தொல்லியல் இடங்களைக் கையகப்படுத்த முனைவதுதான் நமக்கு இப்போது முக்கிய பிரச்னையாகி இருக்கின்றது. ஆனால், சில மாதங்களுக்கு முன்னர் வடக்கில் மிக முக்கியமாக பேசப்பட்ட விடயம் இங்கு நடக்கும் போதைப் பொருள் பாவனை பற்றியதுதான்.

யாரை பார்த்தாலும் அதைப் பற்றியே பேசிக்கொண்டனர். இத்தனை இராணுவ முகாம்கள் இருக்கக்கூடியபோதிலும் எப்படி எங்கள் மண்ணில் போதைப் பொருட்கள் வருகின்றன என்று மக்கள் மாத்திரமல்ல, நமது அரசியல்வாதிகளும்தான் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தனர்.

இப்போது அது பற்றிய செய்திகளை காணவில்லை. அவ்வப்போது ஆங்காங்கே சில இடங்களில் கஞ்சாவும் வேறுசில போதைப்பொருட்களும் கைப்பற்றப்படுகின்றன என்ற செய்திகள் வருகின்றனவே தவிர, அதுபற்றிய பரபரப்புகளை காணவில்லை.

ஏன் அது பற்றிய செய்திகளைக் காணோம் என்று தேடியபோதுதான், இப்போதும் வழமைபோல விடயங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது தெரிய வந்தது.

அண்மையில், மூன்று கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் வடக்கில் கைது செய்யப்பட்டாரென செய்தி வெளிவந்திருந்தது. அதனைக் கொண்டுவந்தவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும். நீதிமன்றம் அவருக்கு உரிய தண்டனையை வழங்கும் என்பது தெரிந்தது தான்.

ஆனால், மூன்று கோடி ரூபாய் பெறுமதியான அந்தப் போதைப்பொருளை அதனை வைத்திருந்தவரே பணம் கொடுத்து வாங்கினாரா அல்லது அவர் வெறும் அம்புதானா என்பது தெரியவரப் போவதில்லை.

மூன்று கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருளை வாங்குபவர் அதனை கோடியில் கொடுத்தே வாங்கியிருப்பார். அதாவது கோடீஸ்வரர்களால் மாத்திரமே அதனை வாங்கி விற்று பணம் சம்பாதிக்க முடியும்.

அப்படியெனில், இதுவரை போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டனரென வடக்கில் பெரும்புள்ளிகள் யாரும் கைது செய்யப்பட்டனரென செய்திகள் வெளிவரவில்லை.

கேரள கஞ்சா நாடு முழுவதும் பாவனையில் இருக்கின்றது. அதைத்தான் உற்பத்தி செய்வதற்கே அரசாங்கம் இப்போது அனுமதி வழங்கியிருக்கின்றதே என்று நீங்கள் கேட்கலாம். அது விமர்சனத்திற்குரியது. ஆனாலும் இன்னமும் உத்தியோகபூர்வமாக உற்பத்தி தொடங்கப்படவில்லை.

ஆனாலும், நாடு முழுவதும் தற்போது பாவனையில் இருக்கும் கேரள கஞ்சா எப்படி நாட்டுக்குள் வந்தது என்பது இரகசியமானதல்ல. அதன் பெரும்பகுதி வடக்கு கடல் ஊடாகவே வருகின்றது. புத்தளம் - கற்பிட்டியிலும் அவ்வப்போது சிலர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டாலும் பெரும்பாலானவை வடகடலூடாகவே வருகின்றன. ஆனால், கேரளாவிலிருந்து கடத்தப்படும் இந்தக் கஞ்சா கடத்துபவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டனரென செய்திகள் வெளிவருவது அதிசயமான ஒன்றாகவே இருக்கின்றது.

ஆனால், இங்கே கொண்டு வரப்படும் கஞ்சாவுக்கான வர்த்தகத்தில் ஈடுபடுகின்றவர்கள் பல கோடி ரூபாய்களில் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால், அதனை கடத்துகின்ற - அதாவது ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்துக்கு கடத்துகின்ற அம்புகள் கைது செய்யப்படுகின்றனவே தவிர, வில்லுகள் யாரும் இதுவரை கைதுசெய்யப்பட்டதாக இல்லை.

வெறுமனே பதின் மூன்று பற்றியும் சமஷ்டி பற்றியும் கதைத்துக்கொண் டிருப்பது தான் நமது மக்கள் பிரதிநிதிகளின் வேலை அல்ல. இது போன்ற சமூக விரோத சம்பவங்களை பற்றியும் கவனம் செலுத்தவேண்டும்.!

- ஊர்க்குருவி.

# இந்தியாவுடனான நில இணைப்பால் இலங்கை பொருளாதாரம் வலுவாகும்!

## இந்தியாவுக்கான இலங்கை தூதுவர்

புதுடில்லி, செப். 01

இலங்கை - இந்திய நில இணைப்பு மற்றும் வலுவான பொருளாதார உறவுகளை கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கை பொருளாதார ஸ்திரமடையும் என்று இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி அனந்தா மையத்தில், 'இந்தியா-இலங்கை உறவுகள் : இணைப்பை ஊக்குவித்தல், செழிப்பை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் நடைபெற்ற விரிவுரை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய - இலங்கை உறவானது கடந்தசில ஆண்டுகளில் மிகவும் வலுவாகியுள்ளது. இது இருநாட்டு பொருளாதார வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

'இந்தியா - இலங்கை பொருளாதார கூட்டு நோக்கு' ஆவணத்தில் வரைபடமாக்கப்பட்டுள்ள ஐந்து முக்கிய அம்சங்களை இயக்குவதன் முக்கியத்துவம் மற்றும் அவை தற்போதுள்ள உறவை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்கும்.

இந்திய பெருங்கடல் மற்றும் பரந்த இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பு கவலைகள் குறித்து இலங்கை முழுமையாக அறிந்திருக்கிறது. இந்தியாவில் உருவாகி வரும் சூழ்நிலைகள் குறித்து இலங்கை அதிக கவனம் செலுத்துகிறது என்றும் கூறினார்.

(ஐ)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 01

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நடத்தப்படும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்பு சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமையுரையை தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப் புலவர் க. கயிலை நாதன் 'உருவாய் அருவாய்' என் னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## கணபதிபிள்ளையார் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழாவில் தீ மிதிப்பும்!



யாழ்ப்பாணம், செப். 01

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு சிறீ மகா கணபதிப் பிள்ளையார் கோவில் (காளி கோவில்) வருடாந்த பெருந் திருவிழாவின் தீர்த்த திருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பிள்ளையாரும் காளி அம்பாளும் தீர்த்தமாடி வெளி வீதி வலம் வந்தனர். அப்போது, அடியார்கள் தீ மிதித்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். இந்த முறைமை பல்லாண்டு காலமாக இந்த கோவிலில் நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு கனரக வாகனங்கள் செல்ல தடை!

யாழ்ப்பாணம், செப். 01

குறிகாட்டுவான் இறங்குதுறையை அண்மித்த பகுதிக்கு கனரக வாகனங்கள் செல்வதற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இறங்கு துறையின் கீழ் பகுதியில் இருக்கும் இரும்புகள் துருப்பிடித்து வலுவிழந்து காணப்படுவதனால் தடை விதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இறங்கு துறை பகுதிக்கு மனித வலுவை பயன்படுத்தி பொருட்களை கொண்டு சென்று படகுகளில் ஏற்றுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# போதைப் பொருள் கடத்தல் ஐந்து சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், செப். 01

போதைப்பொருட்களை சூட்சுமமான முறையில் மறைத்து கொண்டு செல்வதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டிருந்த கெப் ரக வாகனத்துடன் ஐந்து சந்தேகநபர்களை பொலிஸார் குது செய்துள்ளனர்.

உரும்பிராயில் கடந்த இரண்டு நாட்களாக படையினர், பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய சுற்றி வளைப்பிலேயே இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கைதானவர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிள், ஒன்றரை கோடி ரூபாய் பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## சட்டவிரோத மது விற்பனை; குருநகரை சேர்ந்தவர் கைது

யாழ்ப்பாணம், செப். 01

குருநகரில் சட்டவிரோதமாக மதுபானங்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

போயா தினமான நேற்றுமுன்தினம் மது பானங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 25 போத்தல்கள் சாராயம் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர் சான்று பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
01.09.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேவை - தந்திரோபாய அணுகுமுறை

தென்னிலங்கையில் - சிங்கள மக்கள் மத்தியில் - பொருட்படுத்தப்படாத சில அரசியல்வாதிகள் அவ்வப்போது தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். தமிழ் மக்களின் தலையை வெட்டப் போவதாக ஒருவர் கூறுகின்றார். மறுபுறம் குருந்தூர்மலையை வைத்து சரத் வீரசேகரவும் உதய கம்மன்பிலவும் அரசியல் செய்கின்றனர். அவ்வப்போது சவால் விடும் வகையில் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்துக்கு முன்னால் கம்மன்பில போராட்டம் நடத்துவதாக கூறுகின்றார். வடக்குக்குத் துரத்தியடிப்போம் என்கின்றார். இதற்கு தமிழர் தரப்புகள் பதிலளித்துக் கொண்டிருப்பதும் - ஏட்டிக்குப் போட்டியாக கருத்துகளை முன்வைப்பதும் சரியானதா?

அண்மைக்காலத்தில், குருந்தூர்மலை விவகாரம் மற்றும் தையிட்டி விகாரை விவகாரத்தை முன்வைத்தே அனைவரும் பேசி வருகின்றனர். குறிப்பாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் குறித்த பிரச்னைகளுக்கு தலைமை தாங்குவதான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் மூலம் பௌத்த ஆக்கிரமிப்பு என்பதே பிரதான பிரச்னையாகக் காண்பிக்கப்படுகின்றது. ஆனால், அவற்றைத் தடுத்து நிறுத்தும் எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. ஆனால், அரசியல்வாதிகளோ தங்களின் வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொள்வதற்காக அவற்றை பயன்படுத்தி வருகின்றனர்.

தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் காலத்துக்குக் காலம் இவ்வாறான தமிழர் விரோத குழுக்கள் தலைநீட்டுவதுண்டு. இவ்வாறான தரப்புகளை ஆட்சியாளர்களோ தங்களின் தட்டிக் கழிக்கும் அரசியல் தந்திரோபாயத்துக்கான கருவியாகப் பயன்படுத்திக் கொள்வதும் உண்டு. தமிழர் விரோதத்தை கையிலெடுக்கும் தரப்புகள் அனைத்துமே தென்னிலங்கையில் ஆரோக்கியமான அரசியலை முன்னெடுக்க முடியாத - அதனை அறியாத தரப்புகள்தான்.

சிங்கள மக்களுக்கு கூறுவதற்கு அவர்களிடம் எதுவுமில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான், வெறும் இனவாதத்தில் சரணடைகின்றனர். கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியால் சிதறிப்போன தீவிர இனவாத தரப்புகள் அனைத்தும் தற்போது பௌத்த மதத்துக்கு ஆபத்தென்னும் சுலோகமொன்றை கையிலெடுத்திருக்கின்றனர். இவர்களுக்கு தீனி போடும் வகையில் தமிழ்த் தேசிய தரப்புகள் செயல்படுவது புத்திசாலித்தனமானதல்ல.

தீவிர இனவாத தரப்புகளின் இலக்கு ஒன்றுதான் - அதாவது, வீழ்ச்சியடைந்து செல்லும் தங்களின் செல்வாக்கை மீளவும் கட்டியெழுப்புவது. இதற்கான வாய்ப்பாகவே அவர்கள் வடக்கில் மேற்கொள்ளப்படும் விகாரை நிர்மாணங்களை கையிலெடுத்திருக்கின்றனர். இவற்றை வெறும் எதிர்ப்பு - என்னும் நோக்கில் மட்டும் தமிழர் தரப்புகள் கையாளும்போது, அந்த எதிர்ப்பை, சிங்கள மக்களுக்கு எதிரான ஒன்றாக சித்திரிப்பதன் ஊடாகத் தங்களை மீளவும் மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்கவர்களாக உருமாற்றிக் கொள்வதே அவர்களின் பிரதான தந்திரோபாயமாகும். இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம் - அவ்வாறாயின் அவர்கள் செய்வதை தமிழர்கள் அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா - இதனைத் தடுப்பதற்கு தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் செயல்படக்கூடாதா? செயலாற்ற வேண்டும். ஆனால், எங்கள் செயல்பாடுகளால் ஏற்படும் முழு நன்மையும் -சிங்கள அடிப்படைவாத தரப்புகளுக்கான நன்மையாகி விடக்கூடாது.

குருந்தூர்மலை மற்றும் தையிட்டி விவகாரத்தின்போது காண்பிக்கப்படும் சிறு - குழு எதிர்ப்பின் நன்மையை சிங்கள- பௌத்த அடிப்படைவாதிகளே அறுவடை செய்கின்றனர். எனவே, இந்த விடயங்களை எதிர்கொள்வதற்கான பொதுவான பொறிமுறையொன்று அவசியம். ஒரு கட்சி இதனை முன்னெடுப்பதாக காண்பிப்பது ஆபத்தானது. அனைவரும் ஒரணியாக இந்த விடயத்தை முன்னெடுக்க வேண்டும் - அதே வேளை, ஏட்டிக்குப் போட்டியான விடயமாக இதனை அணுகக்கூடாது. இதேவேளை, வேறு எவ்வாறான அணுகுமுறைகளில் இந்த விடயத்தைக் கையாள முடியுமென்று ஆராய வேண்டும். தென்னிலங்கையிலுள்ள தாராளவாத சிங்கள சிவில் சமூக தரப்புகளுடன் இது தொடர்பில் உரையாட வேண்டும். எதிர்க்கட்சியினரும் இந்த விடயத்தில் தலையீடு செய்யும் சூழலை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறான அணுகுமுறையின் ஊடாக இந்த விடயத்தைக் கையாளும்போது, இது சிங்களவர்களுக்கு எதிரான செயல்பாடு - பௌத்தத்துக்கு எதிரான செயல்பாடு - என்றவாறான, இனவாத பிரசாரத்தை முன்னெடுக்க முடியாமல் போகும்.

# 'மதிஅழகன் - தமிழ் ஒலிபரப்பில் ஒரு பொற்கால பதிவு' நூல் வெளியீடு

*கொழும்பு, செப். 01*

'சொற்கோ வி. என். மதிஅழகன்- தமிழ் ஒலிபரப்பில் ஒரு பொற்கால பதிவு' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு தமிழ் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் விழாவுக்கு மூத்த ஊடகவியலாளர் அனந்த பாலகிட்ணர் தலைமை தாங்க, புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பார்.

'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் சாஹித்ய ரத்னா தி. ஞானசேகரன் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்.

பிரதம விருந்தினராக இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மா. தவயோக ராஜா, சிறப்பு விருந்தினர்களாக பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் துரை. மனோகரன், ஒலி, ஒளிபரப்பாளர் அருண் டயஸ் பண்டாரநாயக்கா, கௌரவ விருந்தினர்களாக தமிழன் பிரதம ஆசிரியர் சிவா இராமசாமி, தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். சிறீகஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே. பி. ஆர். ஹரன் ஆகியோர் பங்கேற்பர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் எஸ். விஸ்வநாதன். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் அல்ஹாஜ் எம். இஸட். அஹமத் முனவ்வர், கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி இராஜ விஜயன், கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் பிரிவு அதிபர் திருமதி தங்கேஸ்வரி நந்தகுமார், கொழும்பு இந்துக் கல்லூரி பம்பலப்பிட்டி ஆசிரியரும் ஒலிபரப்பாளருமான திருமதி தர்ஷினி சிவரதன் ஆகியோரும் விழாவில் பங்கேற்று உரையாற்றுவார்.

கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் விவாதக் குழு தலைவர் விகாஷ் சிதம்பரம் விசேட உரை நிகழ்த்துவார்.

மதிஅழகனின் தலையாய ஒலிபரப்பு மாணவர்களில் ஒருவரான அக்கரைபற்று பிறை எவ். எம். கவிஞர் ரபீக் கவிதைகள் வழங்குவார்.

ஊடகவியலாளர் வி. என். மதிஅழகன் அவர்களின் பொன் விழா ஆண்டை முன்னிட்டு சென்னை காந்தளகம் பதிப்பகம் நூலை வடிவமைத் துள்ளது.

ஒரு நூற்றாண்டை எட்டும் இலங்கை ஒலிபரப்பு துறையில் இத்தகைய பொன்விழா மலர் நூல் ஒன்று வெளியிடப்படுவது இதுவே முதற் தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெரியபுராண சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், செப். 01*

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீபால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்புச் சொற்பொழிவு தொடர் 21 (அதிபத்த நாயனார்) பன்னாலை திருவருள்மிகு சிவபூதராயர் ஆலய பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சேக்கிழார் பெருமானின் குருபூஜையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப் புலவர் நித்திய பாபுதரன் 'முதல் மீனை சிவனுக்கு என்று கடலில் விட்ட நாயனார் ' என்னும் விடயப்பொருளில் நடத்துவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## பெண் அதிகாரிக்கு பாலியல் தொல்லை பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்!

*யாழ்ப்பாணம், செப். 01*


சக பெண் பொலிஸ் உத்தியோகத்தரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இரவு நேரக் கடமையில் இருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரிடம் அத்துமீறி நடக்க முயன்ற பலாலி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியே இவ்வாறு காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த 26 ஆம் திகதி கணினி பிரிவில் இரவு நேர கடமையில் இருந்துள்ளார். அப்போது, போதையில் இருந்த பதில் பொறுப்பதிகாரி தனக்கு பாலியல் தொல்லை ஏற்படுத்தினார் என்று பெண் பொலிஸ் அதிகாரி முறைப்பாடு அளித்துள்ளார்.

இதையடுத்தே, குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி இடம் மாற்றப்பட்டார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-ரி)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




### மேடம்

உங்கள் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

### இடபம்

மற்றவர்களால் செய்யமுடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

### மிதுனம்

உற்சாகமாடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணிகளை சிறப்பாக முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

### கடகம்

சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்து கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

### சிம்மம்

தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். அமைதி நிலவும். நன்மைகள் கிட்டும் நாள்.

### கன்னி

பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

### துலாம்

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மன நிறைவு பெரும் நாள்.

### விருட்சிகம்

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.

### தனுசு

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

### மகரம்

கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

### கும்பம்

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

### மீனம்

எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

# இந்தியா முழுவதற்குமாக பேசத் தயாராகும் ஸ்டாலின்!

சென்னை, செப். 01

'ஸ்பீக்கிங் ஃபோர் இந்தியா' என்ற தலைப்பில் ஒலித் தொகுப்பை வெளியிடப்போவதாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தி. மு. க. தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"சமூகநீதி, மதச்சார்பற்ற அரசியல், சமதர்மம், சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சி கருத்தியல் ஆகியவை உள்ளதே இணையற்ற இந்தியா.

ஒரே மதம், ஒரே மொழி, ஒரே உணவு, ஒரே பண்பாடு, ஒரே தேர்வு, ஒரே தேர்தல் உள்ளிட்டவையெல்லாம், பல வகைப்பட்ட மக்கள் வாழும் இந்தியாவை உருக்குலைக்கும் நச்சுக் கருத்துகள்.

குமரி முதல் இமயம் வரையிலான பரந்து விரிந்த இந்திய நாட்டைக் காப்பாற்றும் கடமை நம் அனைவர் கைகளிலும் இருக்கிறது என்ற நோக்கோடு, பாரதிய ஜனதா கட்சி ஆட்சியின் அலங்கோலங்களை அம்பலப்படுத்தியும், பன்முகத்தன்மை கொண்ட, வலுவான மாநிலங்கள் கொண்ட, மதச் சார்பற்ற இந்தியாவைக் காப்பாற்றுவது குறித்தும், கழகத் தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு. க. ஸ்டாலின் குரல்பதிவுத் தொடர் வடிவில் 'ஸ்பீக்கிங் ஃபோர் இந்தியா' என்ற தலைப்பில் பேசவுள்ளார். இத்தொடர் ஆங்கிலத்திலும், இந்தியாவின் பல்வேறு மாநில மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டும் வெளியாகவுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## காவிரி தண்ணீர் விவகாரம்:
# இரட்டை வேடம் போடும் தி. மு. கவை கண்டித்து திருவாரூரில் ஆர்ப்பாட்டம்!

சென்னை, செப். 01

தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வழங்க மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசையும், காவிரி விவகாரத்தில் இரட்டை வேடம் போடும் மக்கள் விரோத தி. மு. க அரசையும் கண்டித்து அ.ம. மு. க. சார்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மன்னார்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் காவிரி நீரை நம்பி டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடியை செய்து வருகின்றனர். தற்போது மேட்டூர் அணையின் நீர் மட்டம் சரிந்து வரும் நிலையில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட மாட்டோம் என்று கர்நாடக காங்கிரஸ் அரசு சொல்லி வருவதால் குறுவைப் பயிர்கள் வாடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனைப் பற்றி அக்கறை இல்லாமல் தேர்தல் கூட்டணி மட்டுமே முக்கியம் என்று சுயநல போக்குடன் தி. மு. க. அரசு செயல்பட்டு வருகிறது.

காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வழங்க மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசையும் டெல்டா விவசாயிகளின் ஜீவாதார பிரச்னையாக உள்ள காவிரி விவகாரத்தில் இரட்டை வேடம் போடும் மக்கள் விரோத திமுக அரசையும் கண்டித்து அ. ம. மு. க. சார்பில், திருவாரூர் - மன்னார்குடி பெரியார் சிலை அருகில் வருகிற செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது - என்றுள்ளது.

(ஐ)

# இலங்கையை பார்க்கும் விதமாக 108 அடி உயரமான அனுமன் சிலை!

**- இராமேஸ்வரத்தில் அமைகிறது -**

இராமேஸ்வரம், செப். 01

இலங்கையை அனுமன் பார்ப்பது போல இந்த 108 அடி உயர சிலை இராமேஸ்வரத்தில் அமைக்கப்பட உள்ளது.

இந்தியாவின் நான்கு திசைகளிலும் அனுமன் சிலை அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக 3ஆவது சிலை 108 அடி உயரத்தில் அமைக்கும் பணிகள் இராமேஸ்வரத்தில் நடைபெற்று வருகின்றன.

2008ஆம் ஆண்டு ஆரம்பமான இந்தத் திட்டத்தில், முதல் சிலை இமாச்சல பிரதேச மாநிலம் ஷிம்லா நகரின் புறநகர் பகுதியான ஜக்குமலையில் ஆரம்பிக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாவது சிலை 2022 ஆம் ஆண்டு ஜெயந்தி அன்று குஜராத்தின் மோர்பி என்ற இடத்தில் பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்டது. மூன்றாவது சிலை அமைக்கும் பணி இராமேஸ்வரத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இராமாயணத்தில் முக்கிய இடம் வகிப்பது இராமேஸ்வரம். இங்கிருந்துதான் அனுமன் இலங்கைக்குச் சென்றார் என்பதால் இராமேஸ்வரத்தில் அனுமனுக்கு பல கோயில்கள் உள்ளன. இந்தியர்கள் அனைவருக்குமே இராமேஸ்வரம் மிகவும் புனிதமான இடம் என்பதாலும், அனுமனின் மகிமையை அனைவரும் அறிந்து கொள்ள மேலும் ஒரு சிறப்பம்சமாக பிரம்மாண்ட அனுமன் சிலையை நிறுவ ஹெச்சிநந்தா அறக்கட்டளை இராமேஸ்வரத்தை தேர்வு செய்தது.

ஒலைக்குடா கடற்கரை அருகே 108 அடி உயர சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த ஆண்டு நடைபெற்றது. தற்போது 16 அடி உயரத்தில் அஸ்திவாரம் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இலங்கையை அனுமன் பார்ப்பது போல இந்த 108 அடி உயர சிலை அமைக்கப்பட உள்ளது. உப்புக் காற்றால் பாதிக்காத வண்ணம் இரசாயனம் கலந்து இதன் சிலை கட்டும் பணிகள் நடைபெற உள்ளன. ஆறு மாதத்துக்குள் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஓ. பி. எஸ். சொத்து குவிப்பு வழக்கு மீள விசாரணைக்கு எடுத்த நீதிமன்று!

சென்னை, செப். 01

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கிலிருந்து ஓ. பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், 10 வருடங்களுக்கு பிறகு அந்த வழக்கை மீண்டும் உயர்நீதிமன்றம் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளது.

2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அதிமுக ஆட்சியில் முதலமைச்சராகவும், வருவாய் துறை அமைச்சராகவும் இருந்த ஓ. பன்னீர்செல்வம் வருமானத்துக்கு அதிகமாக 1.72 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து சேர்த்ததாக வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு சிவகங்கை நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் 2012ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார்.

ஓ. பன்னீர்செல்வம் தனது மனைவி விஜயலட்சுமி, மகன்கள் ரவீந்திரநாத், ஜெயபிரதீப், மகள் கவிதா பானு மற்றும் சகோதரர்கள் பெயரில் வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை வாங்கியதாக தேனி மாவட்ட லஞ்ச ஒழிப்பு காவல் துறை வழக்கு பதிவு செய்தது.

கடந்த 2012ஆம் ஆண்டில் சொத்துக்குவிப்பு வழக்கில் இருந்து ஓபிஎஸ் விடுவிக்கப்பட்டு இருந்தார். இந்நிலையில், 10 வருடங்களுக்கு பிறகு முன் னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்திற்கு எதிரான வழக்கை தாமாக முன்வந்து விசாரிப்ப தாக சென்னை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கு இன்று வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வரவுள்ளது.

(ஐ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் வலி புரிகின்றது!

## நீதி அமைச்சர் விஜேதாஸ கூறுகிறார்

**கொழும்பு, செப். 01**

**“காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வலியும் வேதனையும் அரசுக்குத் தெரியும். அந்த உறவுகள் வடிக்கும் கண்ணீரை எந்தத் தரப்பும் கொச்சைப்படுத்த முடியாது. கொடூர வேதனையில் துடிக்கும் அந்த உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.”**

-இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று நீதி கோரி வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே நீதி



அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

“நீதி அமைச்சர் என்ற ரீதியில் எனது கருத்தை நான் முன்வைத்துளேன். தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என மூவினத்திலும் பலர் காணாமல் போயுள்ளனர் - காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.” - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 24 மணிநேரம் தொடர்ச்சியாக நடனமாடி 9 மலையக இளைஞர்கள் உலக சாதனை



கொழும்பு, செப். 01

இடைவிடாது தொடர்ச்சியாக 24 மணிநேரம் நடனமாடி சோழன் உலக சாதனை புத்தகத்தில் மலையக பெருந்தோட்ட சமூகத்தை சார்ந்த 7 இளைஞர்களும், இரு யுவதிகள் இடம்பிடித்துள்ளனர்.

ஹப்புத்தளை, லிந்துலை, மெரேயா, அக்கரப்பத்தனை, டயகம மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குறித்த இளைஞர், யுவதிகள் 16 முதல் 26 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், இவர்கள் ஹற்றன் பகுதியில் உள்ள நடன பயிற்சி நிலையமொன்றில் பயிற்சி பெற்றவர்கள் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாகவாணி ராஜாவின் மேற்பார்வையில் கடந்த 30 ஆம் திகதி காலை 8 மணி முதல் நேற்று 31 ஆம் திகதி காலை 8 மணிவரை குறித்த இளைஞர்கள் தொடர்ச்சியாக நடனமாடியுள்ளனர். ஹற்றன், டன்பார்க் மைதானத்தில் இந்த சாதனை நிகழ்வு இடம்பெற்றது.

நடனமாடிக்கொண்டிருந்த இளைஞர், யுவதிகள் கட்டங்கட்டமாக ஓய்வெடுக்கவும், உணவு உண்ணவும் சிறிது நேரம் அனுமதி வழங்குவதற்கு சோழன் மேற்பார்வைக் குழுவின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். குறித்த இளைஞர், யுவதிகளின் சாதனை ஆட்டத்தை கண்டுகளிக்க பெருமளவானோர் வருகை தந்திருந்தனர். (அ)

# யானைகள் புகுந்தமையால் பாடசாலைக்கு விடுமுறை

கொழும்பு, செப். 01

புத்தளம், ஆராச்சிக்கட்டு, குருக்குளிய பிரதேசத்திற்கு நேற்று காலை ஆறு காட்டு யானைகள் கூட்டமாக வந்தமையால் குருக்குளிய மகா வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானைகள் கூட்டம் கிராமத்திற்குள் புகுந்ததை அடுத்து மாணவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்ததாகவும் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்களின் பாதுகாப்பு கருதி நேற்று பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டதாக ஆசிரியர் மேலும் கூறினார்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிசார் இணைந்து அப்பகுதி மக்களின் உதவியுடன் காட்டு யானைகளை விரட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# மத்திய வங்கி அறிக்கை குறித்து இனிமேல் பாடசாலை மட்டத்திலும் கலந்துரையாடல்

கொழும்பு, செப். 01

அடுத்த வருடம் முதல் மத்திய வங்கியின் முழுமையான ஒத்துழைப்புடன், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் குறித்து பாடசாலைகளில் கலந்துரையாடும் செயற்திட்டமொன்றை ஆரம்பிக்க தயாராக உள்ளதாகவும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவையான பயிற்சிகளை மத்திய வங்கியின் ஊடாக வழங்க உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டி நுகவெல மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற ‘மூலதனச் சந்தை பற்றிய சங்கங்களை’ நிறுவுவதற்கான தேசிய வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். (அ)

# சீதையம்மனை வழிபட்ட அவுஸ்திரேலியத் தூதுவர்



கொழும்பு, செப். 01

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ் ரீபன்ஸ் நுவரெலியா - சீதா எலிய, சீதையம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

சீதையம்மன் ஆலயத்துக்கு நேற்று முன் தினம் சென்றிருந்த தூதுவர், ஆலய வரலாறு மற்றும் கலாசார முக்கியத்துவம் குறித்து கேட்டறிந்து கொண்டார். (அ)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸார் சிக்கினர்!

முல்லைத்தீவு, செப். 01

15,000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்று முன் தினம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து தவறு தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு இரு உத்தியோகத்தர்களும் 25,000 ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ள நிலையில், அதில் 12,500 ரூபாயை முன்னதாக பெற்றுக் கொண்டுள்ளனர்.

எஞ்சிய தொகையை செலுத்தும் வரை குறித்த முறைப்பாட்டாளரின் தேசிய அடையாள அட்டையை பொலிஸ் உத்தியோகத்தர்கள் பறிமுதல் செய்து வைத்திருந்ததாகவும், அதனை மீள வழங்குவதற்கு 15,000 ரூபாய் பணத்தினை கோரியுள்ளதாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த 15,000 ரூபாய் பணத்தை பெற்றுக்கொள்ள முற்பட்ட போதே மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# ஊழல்வாதிகள் சகலரும் இணைந்து நாமலை ஜனாதிபதியாக்க முயற்சி!

## லலித் எல்லாவெல குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 01

ஊழல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க முயற்சிக்கிறார்கள். கிராம அபிவிருத்தி சபையின் தலைவர் பதவிக்குக் கூட தகுதியற்ற நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க முயற்சிப்பது நகைப்புக்குரியது என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் லலித் எல்லாவெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அப்பாற்பட்டு கட்சியின் அடிப்படை கொள்கைக்கு எதிராக செயற்பட்டதால் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

ஊழல் நிறைந்த அரசியல் கட்டமைப்புக்கு எதிராகவே மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.மக்கள் போராட்டம் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது.

நாட்டு மக்கள் அரசியல்வாதிகளுக்கு மறக்க முடியாத பாடம் கற்பித்தும் பொதுஜன பெரமுன இன்றும் அதை ஒரு படிப்பினையாக கொள்ளவில்லை.

ஊழல்வாதிகள்,பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க முயற்சிக்கிறார்கள்.

கிராம சேவை அபிவிருத்தி சபையின் தலைவர் பதவிக்கு கூட தகுதி இல்லாத நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க முயற்சிப்பது வேடிக்கையாகவுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது.பலவீனமடைந்துள்ள அரசியல் கட்சிகள் தம்மை பலப்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி காலவகாசம் வழங்கியுள்ளார்.

அதை பொதுஜன பெரமுன பயன்படுத்திக் கொள்கிறது. தேர்தல் ஒன்று இடம்பெற்றால் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்- என்றார். (அ)

# பொலிஸ் அதிகாரத்தை பகிர உடன்பாடில்லை!

## '13'குறித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார் அநுர

**கொழும்பு, செப். 01**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்னவென்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க.**

இலங்கையில் பொலிஸ் துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸ் அதிகாரத்தை பகிர்வது தொடர்பில் தமது கட்சி உடன்படாது எனவும், காணி அதிகாரம் பற்றி பேச்சு நடத்துவதற்கு தயாராகவே உள்ளது எனவும் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்தார்.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தற்போது வடக்கில் உள்ள கட்சியோ அல்லது தெற்கில் உள்ள கட்சியோ விவாதத்தை ஆரம்பிக்கவில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்கதான் ஆரம்பித்து வைத்தார். வடக்கில் உள்ள வாக்குகளை இலக்கு வைத்து அரசியல் முன்னெடுக்கப்பட்டுள்ள தந்திரோபாய அரசியல் நகர்வே இதுவாகும்." எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதிலேயே ரணில் தீவிரமாக உள்ளார். ஏனெனில் ஏனைய உள்ளாட்சி தேர்தலா,



மாகாணசபைத் தேர்தலோ நடத்தப்பட்டால் அவற்றின் பெறுபேறுகள், தமக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவியைக்கூட பெற்றுக்கொடுக்காது என்பது ரணிலுக்கு தெரியும். எனவே, 13 ஐ முழுமையாக அமுலாக்க கூடிய தலைவர்தான்தான் என்ற மாயையை உருவாக்கி அதன் மூலம் வாக்கு வேட்டை நடத்துவதற்கான அரசியல் உபாயமாகவே, 13 குறித்த விவாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே, 13 தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை முதலில் ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்.

இரண்டாவது, மாகாணசபைத் தேர்தலை நடத்திய பிறகு 13 பிளஸா அல்லது அதிகார குறைப்பா என்பது பற்றி பேசலாம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது. ஏனெனில் இலங்கையில் பொலிஸ் என்பது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. மேல் மாகாணசபை முதல்வராக பிரசன்ன ரணதுங்க இருந்தால், அவர் போன்றவருக்கு பொலிஸ் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும்? இது வடக்கில் அல்ல தெற்கில் பிரச்சினையாக அமையும்.

காணி அதிகாரம் பற்றி கதைக்கலாம். தொல்லியல் இடங்கள் மத்திய அரசின்கீழ்தான் இருக்கும். மகாவலி, வனஜீவராசிகள் திணைக்களத்துக்குரிய காணி, ரயில்வே திணைக்களத்துக்குரிய காணி என்பன அரசின்கீழ் தான் இருக்கும். அதேபோல வடக்கில் படையினர் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்." - எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் எவரும் இணையமாட்டார்கள்

## கூறுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, செப். 01

ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது வருடாந்த மாநாட்டில் தமது கட்சியின் உறுப்பினர்கள் எவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளமாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவை வழங்குவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் தெரிவித்து வரும் நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு வருடத்திற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட போது ஹரின் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவுமே அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டனர்.

மேலும் கடந்த 2020 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் டயானா கமகே, ராஜபக்ஷக்களுக்கு ஆதரவை வழங்கினார்.

ராஜபக்ஷக்களுடன் இணைந்து கொண்டதன் மூலம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீள முடியாத ஒரு தவறைச் செய்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஏழு தேசியப் பட்டியல் ஆசனங்களை பெற்றுக்கொண்ட எமது கட்சியை பார்த்து ஐக்கிய தேசியக் கட்சி அஞ்சுகிறது-என்றார்.

# அடையாள அட்டை இல்லாதோர் அதனை பெற ரூ. 2500 அபராதம்

கொழும்பு, செப். 01

40 வயதுக்கு மேற்பட்ட, தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அதனைப் பெறுவதற்காக 2,500 ரூபா அபராதமாகச் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

முன்னதாக தேசிய அடையாள அட்டை பெறாத குற்றத்தை குறிப்பிட்ட காலத்துக்குள் தீர்த்து வைப்பதற்காக இந்த அபராதம் விதிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், உயர்த்தப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்த முடியாத குறைந்த வருமானம் பெறும் நபர்களிடமிருந்து மட்டும், முன்னர் அறிவிடப்படும் அபராதத் தொகையான 250 ரூபாவை வசூலிக்க ஆட்திவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி கையொப்பமிட்ட கடிதம் மூலம் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் இது அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்நிதியான் தேர்த்திருவிழாவில் 25 பவுண் தங்க நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாணம் செல்வ சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களின் 25 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

ஆலய தேர் திருவிழா நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது. அதன் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

அவ்வேளையில், சன கூட்டத்தை பயன்படுத்தி திருடர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தி ருந்தோரின் நகைகளை திருடி உள்ளனர்.

நகை திருட்டுக்கள் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு 11 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. முறைப்பாட்டின் பிரகாரம் சுமார் 25 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மூலதன சந்தைக் கழகங்கள் 100 பாடசாலைகளில் நிறுவப்படும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, செப். 01

பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வையும் நிதி பற்றிய அறிவையும் மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, தெரிவுசெய்யப்பட்ட 100 பாடசாலைகளில் "மூலதன சந்தைக் கழகங்களை" நிறுவும் வேலைத்திட்டம் கண்டி நுகவெல மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் போது உரையாற்றிய ஜனாதிபதி ரணில்,

அடுத்த வருடம் முதல் மத்திய வங்கியின் முழுமையான ஒத்துழைப்புடன் மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் குறித்து பாடசாலைகளில் கலந்துரையாடும் செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க தயாராக உள்ளதாகவும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவையான பயிற்சிகளை மத்திய வங்கியின் ஊடாக வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி, நாடு முழுவதிலும் நிறுவப்படும் முதல் 100 மூலதனச் சந்தை பற்றிய கழகங்களிடையே அதிக திறமைகளை வெளிப்படுத்தும் பாடசாலைக்கு பரிசில்கள் வழங்கப்படும் எனவும், அந்தக் கழகத்தைச் சேர்ந்த 10 மாணவர்கள், அவர்களின் ஆசிரியர்களுக்கு சிங்கப்பூர் சென்று, அந் நாட்டின் பங்குச் சந்தை பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படும் எனவும் கூறினார்.

# தொழில் அமைச்சின் செயலாளரை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு!

கொழும்பு, செப். 01

தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீரவை, நேற்று முதல் எதிர்வரும் 10 நாட்களுக்குள் ஹொரணை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹொரணை நீதவான் நீதிமன்றில் இடம்பெறும் வழக்கின் மேலதிக விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவே, தொழில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட இரண்டு பேருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஹொரணை பகுதியில் உள்ள தொழிற்சாலையொன்றில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்து ஒன்று தொடர்பில், அந்த தொழிற்சாலையினது பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவருக்கு எதிராக சாட்சியங்களை உருவாக்கி சதி செய்ததாக சந்தேகநபர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஹொரணை நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மற்றும் பாணந்துறை மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் வலுவற்றதாக்குமாறு கோரி, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மேன் முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, பிரதிவாதிகளை எதிர்வரும் 14ஆம் திகதி முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# வசந்த முதலிகே உட்பட மூவருக்கு பிடியாணை

கொழும்பு, செப். 01

வழக்கொன்றில் ஆஜராகாமையினால் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஆகியோருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட வழக்கில் ஆஜராகாமையினால் மூவருக்கு எதிராகவும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியில் கொழும்பிலுள்ள தனியார் கட்டடமொன்றுக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடத்திற்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார். (அ)

# ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்குக!

## கோருகிறார் சந்தியா எக்னெலிகொட

மட்டக்களப்பு, செப். 01

**இலங்கையில் காணாமல்போனோர் தொடர்பாக 2022 இல் ஐ.நாவில் நியமிக்கப்பட்ட விசாரணைக்கான குழுவின் விசாவுக்கான அனுமதியை வரத்தமானி மூலம் தடை செய்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டுமென காணாமலாக்கப் பட்ட ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொடவின் துணைவியார் சந்தியா எக்னெலிகொட கோரிக்கை விடுத்துள்ளார்.**

மட்டக்களப்பில் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தையிட்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல்போனவர்கள் வெளிநாட்டில் இருப்பதாக ஜனாதிபதி தெரிவிக்கும் நகைச்சுவையினை நிறுத்தும் வரையில் இந்த நாட்டில் என்றுமே நீதியை பெற்றுக் கொள்ள முடியாது.

இந்த நாட்டில் காணாமல் போனவர்கள் என்று ஒன்று இல்லை எனவும் அவர்கள் வெளிநாடுகளில் இருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

எனவே நீங்கள் ஜனாதிபதி தனே அவர்களை வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரமுடியும் தானே எனவே இவ்வாறான நகைச்சுவையினை நிறுத்துங்கள்.

வடக்கு-கிழக்கில் பலாத்காரமாக காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீரில் மூச்சுவிட்ட பூமி ஆகும்.

ஏன் என்றால் கொழும்பு கொஸ்வத்தை பிரதேசத்தில் பலவந்தமாக எனது கணவரான ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொட கடத்தி செல்லப்பட்டார்.

அவர் அங்கு எரிக்கப்பட்டாரா அல்லது எங்காவது புதைக்கப்பட்டாரா? அல்லது



கடலில் கொண்டு சென்று போட்டார்களா? தெரியவில்லை இருந்தபோதும் இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் பல காரணங்கள் தெரிவிக்க வேண்டியுள்ளது.

ஓ.எம்.பி காரியாலயம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அதிகளவான பணத்தை வீண் செலவு செய்து நடாத்தி வருகின்றது.

இந்த ஓ.எம்.பி. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை உண்மையாக நீதியாக தேடி கொடுத்துள்ளதா?

குறைந்தது உண்மையையாவது அமைப்புகளுக்கு முன் வைத்தா? இல்லை.

இந்த தாய்மாருக்கு தேவையானது உண்மையும் நீதியும் அது இந்த நாட்டில் நடைபெறாது என்பதால் தான் சர்வதேச அமைப்புக்களிடம் செல்லவேண்டியுள்ளது.

2022 ஐ.நாவில் இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த விசாரணைக்குழு இதுவரை இலங்கைக்கு வரவில்லை. அவர்களுக்கான விசா அனுமதியை வர்த்தமானி மூலம் தடை செய்து அதனை ஜனாதிபதியின் வீட்டு காப்பற்றின் கீழ் போடப்பட்டுள்ளது.

எனவே சட்டத்தின் கீழ் அவர்கள் இலங்கைக்கு வர அனுமதிக்கவும் அதற்கான நீதியை வேண்டி போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய தேவை ஏற்படும்-என்றார். (அ)



# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு

கொழும்பு, செப். 01

ஐ.நாவின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரோ பிராஞ்சை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்து கலந்துரையாடினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிராஞ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நாட்டில் தனது பணியை ஏற்றுக்கொண்டதன் நிமித்தமே இச்சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் பல்வேறு சமூக பொருளாதார அரசியல் விடயங்கள் தொடர்பாக இரு தரப்புக்கும் இடையில் இதன்போது பல கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

நாட்டில் நிலவிவரும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ.நாவின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கு தெரியப்படுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை ஒத்தி வைத்து அடிப்படை உரிமைகளை மீறி வருவது தொடர்பாகவும் அவர் மேலும் தெரியப்படுத்தினார். (அ)

# யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி இன்று ஆரம்பமாகின்றது.

கைத்தொழில் அமைச்சும், கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து இன்று முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரையில் இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

குறித்த கண்காட்சி கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதன்போது, முதலீடு, வர்த்தக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல்களும் வழங்கப்படவுள்ளதாக, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொறியியல்துறை பணிப்பாளர் நிஷாந்த வீரதுங்க தெரிவித்தார்.

# பாடசாலை நேரத்தை மாலை 4 மணிவரை நீடிக்க யோசனை!

கொழும்பு, செப். 01

பாடசாலை நேரத்தை காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நீடிப்பதற்கு யோசனையொன்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காலி பகுதியில் கரையோரங்களை சுத்தப்படுத்தும் வேலைத் திட்டத்தின் பின்னர் ஊடங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

பாடசாலை மாணவர்களை விளையாட்டில் ஈடுபட ஊக்குவிக்கும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# வெடிபொருட்களுடன் மூன்று பேர் கைது!

கொழும்பு, செப். 01

கண்டி - அக்குரணை பகுதியில் வெடிபொருட்களுடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டியில் வந்த இரண்டு பேர், அக்குரணை நகரில் வைத்து நபர் ஒருவருக்கு பொதியொன்றை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சந்தேகமடைந்த பொலிஸார், குறித்த பொதியை பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது, அந்த பொதியிலிருந்த எஸ்.ஜீ ரக 7 தோட்டாக்களும், ரி 56 துப்பாக்கி பயன்படுத்தப்படும் 3 தோட்டாக்களும், 5 வெற்றுத் தோட்டாக்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அக்குரணை, நம்பொடை மற்றும் அட்டபாகை பகுதியைச் சேர்ந்த 39 முதல் 48 வயதுக்கிடைப்பட்டவர்கள் என பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# மருந்துக் கொள்வனவு தொடர்பில் மக்களின் கருத்து பெற தீர்மானம்!

கொழும்பு, செப். 01

நாட்டில் இடம்பெற்று வரும் மருந்து கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சு
Ministry of Health

தரமான மருந்துகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதில் உள்ள பிரச்னைகளை கண்டறிதல் உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதன்படி, நாட்டில் தற்போதுள்ள மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பில் எந்தவொரு தரப்பினரும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் மருந்துக் கொள்வனவு செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிவதற்கும், வெளிப்படையான கொள்வனவு முறையை அறிமுகப்படுத்துவதற்கும், உயர்தர மருந்துகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்கும், மருந்து ஒழுங்குமுறை மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளை முன்வைப்பதற்கும் ஐந்து நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று கடந்த ஜூலை மாதம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கை மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்றும் அறிக்கை தயாரிப்பதற்கு முன்னதாக, மருந்து கொள்முதல் செயல்முறை குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு தனிநபரோ அல்லது நிறுவனமோ இவ்வாறு தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# அபிவிருத்தி உதவியாளர்களை மாகாண அரச சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு





அம்பாறை, செப். 01

பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை கிழக்கு மாகாண அரச சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அம்பாறை டி.எஸ் சேனநாயக்க தேசிய பாடசாலையின் பிரதான கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நியமனக்கடிதம் வழங்கும் வைபவத்தில் அதிதிகளாக கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, டபிள்யூ. வீரசிங்க , விமலவீர திஸாநாயக்க, திலக் ராஜபக்ஸ, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், அம்பாறை மாவட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்கள அதிகாரிகள், என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கல்முனைக் கல்விக் கோட்ட தமிழ் மொழி தினப் போட்டி!



காரைதீவு, செப். 01

அகில இலங்கை தமிழ் மொழித்தினத்திற்கான கல்முனைக் கல்வி மாவட்ட தமிழ் மொழி தினப் போட்டி நேற்று வியாழக்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மற்றும் திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களின் போட்டியாளர்கள் கலந்து கொள் ளும் இந்த மாவட்ட மட்ட போட்டி நிகழ்வின் ஆரம்ப விழா, சம் மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதம அதிதி தேசியக் கொடி ஏற்றியதும், சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

ஏனைய கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

# அஸ்வெசும வேலைத்திட்ட தெளிவூட்டல் செயலமர்வு





அம்பாறை, செப். 01

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் எதிர்கால திட்டங்கள், ‘அஸ்வெசும’ வேலைத்திட்டம் தொடர்பில் திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு தலைவர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு கடந்த புதன்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி பாக்கியராஜா, குறுநிதிப் பணிப்பாளர் விக்கிரசிங்க, மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவப் பணிப்பாளர்கள், சமுர்த்தி வலய உதவியாளர்கள், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



மட்டக்களப்பு, செப். 01

**கிழக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.**

அரசியலுக்கு வருவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீண்ட கலந்துரையாடல், கருத்துக் கணிப்பு மற்றும் முறைப்பாடுகளை பரிசீலித்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனியார் கல்வி நிறுவனங்கள் வர்த்தக சான்றிதழ்களைப் பெறவேண்டும், ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகளை நடத்தக் கூடாது, மற்ற நாட்களில் மாலை 6 மணிக்கு முன் நடத்தவேண்டும்.

மேலும் ஒரு மணி நேர வகுப்பின் அதிகபட்ச கட்டணம் உயர்தர மாணவருக்கு 70 ரூபாயாகவும் மற்ற மாணவர்களுக்கு 50 ரூபாயாகவும் இருக்கவேண்டும்.

பெற்றோர் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும், நேர அட்டவணை, வருகை குறிக்கப்படல், ஆசிரியர்களின் பெயர் காட்ட வேண்டும் மற்றும் குடிதண்ணீர், சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்க வேண்டும்.

பயிற்சியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்கள் பற்றிய தகவல்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

இதேநேரம் விடுமுறையில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலை நேரங்களில் வகுப்புகள் அல்லது கருத்தரங்குகளை நடத்தக்கூடாது-என்றார். (அ)

# சமாதான நல்லிணக்க ஊக்குவிப்பு வைபவம் காரைதீவு மண்டபத்தில்




காரைதீவு, செப். 01

சமூக அபிவிருத்தி நிறுவனம் காரைதீவு ஸ்பீட் நிறுவனத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் 10 கிராமங்களை உள்ளடக்கியதாக சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் காரைதீவு சம்மாந்துறை கல்முனை வடக்கு ஆகிய பிரதேசங்களுக்கான பொதிகள் வழங்கும் நிகழ்வு காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் சமூக அபிவிருத்தி நிறுவன பிராந்திய இணைப்பாளர் எம்.எஸ். ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் சிறப்பதிதியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் எம். இர்பான், பங்காளர் நிறுவனமான ஸ்பீட் நிறுவன செயலாளர் வே. ஜனார்த்தனன், உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான வலையமைப்பு மற்றும் இத் திட்டத்துக்கான ஸ்பீட் நிறுவன இணைப்பாளர் எம்.ஐ. றியால் அதன் அங்கத்தவர்களும் கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் காரைதீவு, கல்முனை வடக்கு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 75 கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

(அ)

# தென்னாபிரிக்காவில் அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கரத் தீ விபத்து!

## 64 பேர் பலி! பலர் காயம்!!

கேப்டவுண், செப். 01

**தென்னாபிரிக்காவின் முக்கிய வணிக மையமாக கருதப்படும் ஜொகன்னஸ்பெர்க் நகரில் உள்ள கட்டடமொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.**

**தென்னாபிரிக்காவில் உள்ள மிகப்பெரிய நகரமான ஜொகன்னஸ்பெர்கில் உள்ள ஐந்து மாடி கட்டடத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.**



ஐந்து மாடிகளைக் கொண்ட மிகப்பெரிய அடுக்குமாடிக் குடியிருப்பில் நேரிட்ட தீ விபத்தில், 43 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

அதிகாலை 1.30 மணிக்கு தீயணைப்புத்துறையினருக்கு தீ விபத்து குறித்து தகவல் கிடைத்துள்ளது.

விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர் போராடி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நேற்று காலையில் தான் தீ முழுமையாக அணைக்கப்பட்டதாகவும் ஆனாலும் கட்டடத்திலிருந்து புகை வெளியேறி கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீ விபத்து நேரிட்ட கட்டடத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி உடனடியாக துவங்கப்பட்டாலும், 64 பேர் பலியாகினர்.

இதுவரை 64 பேரின் உடல்கள் வெளியே கொண்டு வரப்பட்டுள்ளதுடன், 43 பேர் காயமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# புளோரிடாவில் சூறாவளி!

நியூயோர்க், செப். 01

அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் சூறாவளி காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சூறாவளியானது கியூபாவில் இருந்து மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில் புளோரிடா மாநிலத்திற்குள் நுழைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், புளோரிடா மாநிலத்தில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புளோரிடாவில் மின் இணைப்புக்களும் முற்றிலும் முடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரையில் எந்த தகவலும் வெளியாகவில்லை. (அ)



# 2 உலங்கு வானூர்திகள் வீழ்ந்தன; 6 உக்ரைன் படையினர் உயிரிழப்பு!

கீவ், செப். 01

கிழக்கு உக்ரைனில் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த, இரண்டு உலங்கு வானூதிகளில் இருந்த 6 உக்ரைனிய படையினர் உயிரிழந்தனர் என உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது

குறித்த அறுவரும், ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு உக்ரைன் நகரமான பாக்முட்டில் பணியாற்றியதாக உக்ரைன் இராணுவத்தின் டெலிகிராம் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

டொனெட்ஸ்க் - பாக்முட்டின் பகுதியில், ரஷ்யா - உக்ரைன் போரின் முக்கிய இடமாக கருதப்படுகிறது.

இரண்டு உலங்கு வானூர்திகளும் அழிக்கப்பட்டுள்ளதுடன், அதிலிருந்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் குற்றம் சுமத்தியுள்ளது.

# ஆபிரிக்க நாடான கபோனில் வெடித்தது இராணுவ புரட்சி!

## ஜனாதிபதி சிறைப்பிடிப்பு

லிப்ரெவெல்லி, செப். 01

மேற்கு ஆபிரிக்க நாடான கபோனில் இராணுவத்தினர், புரட்சி மூலம் ஆட்சியைக் கைபற்றியுள்ளனர்.

இதனையடுத்து அந்நாட்டின் ஜனாதிபதி அலி பொங்கோ வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என இராணுவம் அறிவித்துள்ளது.

இதேவேளை தலைநகர் லிப்ரெவெல்லியில் ஆட்சி கவிழ்ப்பை மக்கள் கொண்டாடி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அலி போங்கோ 3ஆவது முறையாக வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையம் அறிவித்த ஒரு மணி நேரத்துக்குள் இராணுவத்தினர் ஆட்சியை பிடித்ததாக தொலைக்காட்சியில் தோன்றி அறிவித்தனர்.



இதனிடையே வீட்டுக்காவலில் உள்ள ஜனாதிபதி போங்கோ உலகநாடுகளிடம் உதவி கோரியுள்ளார்.

காபோன் ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கண்டனம் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஏலத்திற்கு வருகின்றன டயானாவின் ஆடைகள்!

லண்டன், செப். 01

மறைந்த பிரித்தானிய இளவரசி டயானாவின் மூன்று ஆடைகள் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏலத்திற்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலியன்ஸ் என்ற ஏல நிறுவனத்தினால் அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை பெவர்லி ஹில்ஸ் பகுதியில் குறித்த ஏல நிகழ்வு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு டயானா விபத்தில் இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்னர் தொண்டு நிறுவனங்கள் சிலவற்றுக்காக தனது 70 ஆடைகளை ஏலம் விட்டிருந்தார்.

அதில் 3 ஆடைகளை ஏலம் எடுத்த மிச்சிகனை சேர்ந்த எலன் பெத்தோ என்ற பெண்மணி அண்மையில் காலமானதையடுத்து அவரிடம் இருந்த டயானாவின் உடைகள் மீண்டும் ஏலத்திற்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 3 ஆடைகளையும் டயானா பல முறை அணிந்துள்ளார் எனவும், அவை அதிகபடியாக 4 லட்சம் டொலர்கள் வரை ஏலம் போகக் கூடும் என எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# தென்கொரியா-அமெரிக்கா இணைந்து இராணுவ பயிற்சி!

சியோல், செப். 01



கொரிய தீபகற்பத்தில் தென்கொரியா - அமெரிக்கா இணைந்து நேற்று கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தென்கொரியா - அமெரிக்கா கூட்டு இராணுவ பயிற்சிக்கு பதிலடியாக வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

வடகொரியாவின் ஏவுகணை தென்கொரியாவின் கிழக்கு கடற்பகுதியில் விழுந்ததாக தகவல் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அறகலய போராட்டக்காரர்களை ஏமாற்றவே இனவாதம், மதவாதம் தூண்டப்படுகின்றது!

## ரெலோவின் பேச்சாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 01

**ஆட்சியாளர்களுக்கு எதிரான பொதுமக்கள் போராட்டத்தை முன்னெடுத்தவர்களை ஏமாற்றவே தற்போது நாட்டில் இனவாத, மதவாத சக்திகள் முளைவிட்டுள்ளதாக ரெலோ வின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அறகலய போராட்டக் காரர்களை ஏமாற்றவே இனவாத மதவாத சக்திகள் முளைகின்றன.

இனவாத மதவாத சக்திகள் போராட்டக்காரர்களுக்கு வழங்கிய உறுதிமொழியிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார்களா?

இதை ஆட்சி மாற்றத்திற்காக போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அறகலய போராட்டக்காரர்களுக்கு முறைமை மாற்றம் ஒன்றை செய்வோம் என்று உறுதிமொழி வழங்கியவர்கள் இன்று இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டுவதன் மூலம் தங்கள் உறுதிமொழிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்களா?

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி ஆட்சி பீடம் ஏறியவர்களை நாட்டு மக்களே தவறை உணர்ந்து கொண்டு அறகலயப் போராட்டத்தை முன்னெடுத்து துரத்தினார்கள். போராட்டக்காரர்கள் முன்வைத்த முறைமை மாற்றம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஆறு மாத காலத்திற்குள் அதை செய்து முடிப்பதாக உறுதிமொழி வழங்கிவிட்டு இன்னும் அது பற்றி எதுவுமே செய்யாது உள்ளனர்.

மாறாக மீண்டும் இனவாத மதவாத கோஷங்களை எழுப்பிக் கொண்டு தாங்கள் போராட்டக்காரருக்கு வழங்கிய உறுதிமொழிகளை மடைமாற்றம் செய்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இதை ஆட்சி மாற்றத்திற்காக போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக சரத் வீரசேகர, உதய கம்மம்பிள்ள, விமல் வீரவன்ச மற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ள புத்த பிக்குகள் உட்பட பலர் அறகலய போராட்ட காலத்திலும் பின்னரும் தலைமறைவாக அஞ்சி வாழ்ந்தனர். போராட்டக் காரர்களிடம் இருந்து தப்பிக்க அவர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டனர். இன, மத பேதங்களை கட்டவிழ்த்து ஆட்சியாளர்கள் சிங்கள மக்களை ஏமாற்றி நாட்டைக் கொள்ளையடித்தனர் என்பதே போராட்டக் கார்கள் முன்வைத்த வாதம். அதற்கு பரிகாரமாக முறைமை மாற்றத்தை கோரினர். புதிய அரசியல் யாப்பினை உருவாக்கி அக்கோரிக்கையை நிறைவேற்ற உறுதிமொழி வழங்கி மூச்சு விட்டவர்கள் அதை நிறைவேற்றாமல் இனவாத மதவாத கருத்துக்களை எழுச்சி பெற வைத்து நாட்டு மக்களை மீண்டும் ஏமாற்ற முயலுகிறார்கள்.

பொருளாதார சிக்கல்களில் இருந்து நாடு சுமுகநிலையை அடைந்து மீள முயற்சித்துக் கொண்டிருந்தாலும் முறைமை மாற்றம் சம்பந்தமாக எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை கைக் கொள்ளவில்லை. இந்த காலக்கெடு முடிந்து போராட்டக்காரர்கள் மீண்டும் தலையெடுத்து விடக்கூடாது என்பதற்காக தமிழ் மக்கள் மீது இனவாதத்தையும் மதவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டு தங்கள் உறுதி மொழிகளில் இருந்து தப்பிப்பதற்கும் போராட்டக்காரர்களை ஏமாற்றுவதற்கும் முயற்சி செய்கிறார்களா என்ற சந்தேகம் உறுதியாகி வருகிறது.

சிங்கள மக்கள் குறிப்பாக போராட்டக் காரர்களை இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இனவாத மதவாத சக்திகள் மீண்டும் ஆட்சி பீடம் ஏற இடமளிக்கக் கூடாது. இது ஒட்டு மொத்த நாட்டிற்கும் கேடு விளைவிக்கும்-

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சு.க. பொதுச் செயலாளர் பதவியில் மாற்றமில்லை

கொழும்பு, செப். 01

கட்சி மாநாட்டின்போது சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் மாற்றம் வரவுள்ளது என வெளியாகும் தகவல்களை கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் ஆண்டு விழா எதிர்வரும் 2 ஆம் திகதி குருநாகலில், தயாசிறி ஜயசேகரவின் தொகுதியில் நடைபெறவிருந்தது.

எனினும், ஆளுங்கட்சி பக்கம் உள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையின் பிரகாரம் மாநாடு கொழும்புக்கு மாற்றப்பட்டது எனக் கூறப்பட்டது.

இதனால் கொழும்பு மாநாட்டில் தயாசிறி பங்கேற்கமாட்டார் எனவும், பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்படவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின. இது தொடர்பில் வினவியபோதே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அதேவேளை கட்சி மாநாட்டில் தயாசிறி ஜயசேகர பங்கேற்பார் எனவும், செலவு குறைப்பை கருத்திற்கொண்டே மாநாடு கொழும்பில் நடத்த முடிவெடுக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தயாசிறி ஜயசேகர ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளார் என்றுகூட தகவல் பரப்படுகின்றது. அந்த தகவலிலும் உண்மை இல்லை-என்றார் மைத்திரி. (அ)

# 2022 மே 9 வன்முறைகள் குறித்து புதிய விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, செப். 01

கடந்த ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவு புதிய விசாரணையை ஆரம்பித்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளைத் தடுக்கத் தவறியதாகக் கூறி அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உள்ளத்துக்கு பலருக்கு எதிரான வழக்கு பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் செய்த தவறுகள், வன்முறைகள் மற்றும் அடுத்தடுத்த சம்பவங்கள் தொடர்பாக கடற்படையின் அட்மிரல் வசந்த கரன்னகொட விசாரணையை மேற்கொண்டார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் செயலாளரிடம் இருந்து இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பானஅறிக்கையின் பிரதி பெறப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார். (அ)

# 5,000இற்கும் மேற்பட்ட சிறுவர் 7 மாதங்களில் துஷ்பிரயோகம்!



கொழும்பு, செப். 01

இந்த வருடம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 5000க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 5,456 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.

அவற்றில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,296 முறைப்பாடுகளும், கடுமையான காயங்கள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் 163 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 242 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

மேலும், சிறுவர்கள் யாசகம் எடுப்பது தொடர்பில் 196 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக உதயகுமார அமரசிங்க குறிப்பிட்டார்.

சிறுவர்கள் யாசகம் எடுப்பது தொடர்பான முறைப்பாடுகள் பெரும்பாலும் கொழும்பு மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து பதிவாகியுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல் மற்றும் இணையவெளியில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக 110 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சிறுமிகள் தொடர்பில் 76 முறைப்பாடுகளும், சிறுவர்கள் தொடர்பில் 31 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஏற்கனவே பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அந்த அதிகார சபையினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு தேசிய திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ)

# இலங்கையின் திறன் மேம்பாட்டுக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பு

## கோபால் பாக்லே தெரிவிப்பு

கொழும்பு, செப். 01

இந்தியாவின் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை கொள்கைக்கு இணங்க, இலங்கையின் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியுடனான இலங்கையின் 50 வருட தொடர்பை பாராட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மேற்கண்டவாறு கூறினார்.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, இந்திய தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், பாதுகாப்புப் படைகளின் பிரதானி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள் மற்றும் இந்தியாவின் இந்திய தேசியப் பாதுகாப்பு கல்லூரியின் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



தேசியப் பாதுகாப்பு கல்லூரியில் பயின்ற இலங்கையின் முதலாவது மாணவர் அட்மிரல் குணசேகரவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டதுடன், 50 ஆண்டுகளுக்கு முன்பு 1972 இல் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு கல்லூரியில் கழித்த நேரங்கள் தொடர்பாக தனது அனுபவங்களையும் அவர் இந்நிகழ்வில் பகிர்ந்துகொண்டார்.

இந்தியாவின் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை கொள்கைக்கு இணங்க இலங்கையின் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு இந்தியா அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதாக தூதுவர் கோபால் பாக்லே இந்நிகழ்வில் கூறினார்.

ஆயுதப் படைகளுக்கிடையேயான பயிற்சி ஈடுபாடுகள், சகோதரத்துவம் மற்றும் இயங்குதன்மை ஆகியவற்றின் வலுவான பிணைப்புகளுக்கு அடித்தளமாக தேசிய பாதுகாப்புக் கல்லூரி அமைந்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ன, பல்வேறு பரிமாணங்களில் இரு நாடுகளுக்கும் இடையேயான பிணைப்பை ஏற்படுத்த தூதுவர் எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டினார்.

இலங்கை ஆயுதப்படை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதில் இந்தியா எப்போதுமே வலுவான தூணாக இருந்து வருகிறது. நட்பு மற்றும் எமது அண்டை நாடாக உள்ள இந்தியா, இலங்கையின் ஆயுதப் படைகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி மற்றும் விரிவான பயிற்சி வாய்ப்புகளுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயின்ற இலங்கையில் உள்ள 50 முன்னாள் மாணவர்களும் கலந்து கொண்டனர். (அ)

## தொல்பொருள்...

ஆகியிருந்தார்.

நீதிவான் தனது கட்டளையில், நீதிவான் நீதிமன்றம் முன்னர் வழங்கிய கட்டகளைகளை மதிக்காது நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன. தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நீதிமன்றின் உத்தரவுகளை மதித்து நடைமுறைப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார். அத்துடன், பொலிஸாரும் தமது கடமைகளை நிறைவேற்றவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

இந்த வழக்கின்போது நீதிமன்றில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் , வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள்மற்றும் பொதுமக்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிவானின் தீர்ப்பையடுத்து தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வது குறித்து தமிழ் தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ - 10)

## கொக்குத்...

மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம. உமாமகள், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா. சண்முகதாசன், கிளிநொச்சி - முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ் மா அதிபர் சமுத்திர ஜீவ, முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ் பிரிவினர் ஆகியோர் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

அகழ்வு பணியை முன்னெடுக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவதாக இதன்போது தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த ஜூன் 29ஆம் திகதி குடிதண்ணீர் விநியோகத்துக்காக கிடங்கு வெட்டியபோது மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ஜூலை 6ஆம் திகதி நீதிமன்றின் அனுமதியுடன் தோண்டப்பட்டபோது 13 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அகழ்வு பணி இடைநிறுத்தப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முன்னெடுத்த போராட்டங்களைத் தொடர்ந்து நிதி ஒதுக்கப்பட்டு நீதிமன்றின் அனுமதியுடன் மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## புற்றுநோயின்...

பல காரணிகள் புற்றுநோயாளர்கள் அதிகரிக்கக் காரணம் என்று தெரிவித்த அவர், தேசிய புற்றுநோய் நிறுவகத்தில் தினமும் சுமார் 36 புதிய புற்றுநோயாளிகள் பதிவாகின்றனர் - என்றார்.

அத்துடன், இந்த நிறுவகத்தில் மட்டும் மாதாந்தம் பதிவாகும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது. தற்போது தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் சுமார் ஆயிரம் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் புற்றுநோயாளர்கள் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

இந்த எண்ணிக்கையிலான நோயாளர்களுக்கு மேலதிகமாக, நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளின் புற்றுநோய் பிரிவுகளில் புதிய நோயாளர்கள் பதிவாகி - சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# மூவாயிரம் புதிய தாதியர்களை சேவைக்கு உள்வாங்க தீர்மானம்!

கொழும்பு, செப். 01

சுகாதார துறைக்கு 3 ஆயிரம் தாதியர்களை இணைத்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பணிப்புரை விடுத்துள்ளார் என்று



தெரிவிக்கப்பட்டது.

ஆட்சேர்ப்பு தொடர்பான பிரச்னைகள் ஏற்படும் பட்சத்தில் அமைச்சரவை பிரேரணையைத் தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுகாதார அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தாதியர் துறை அதிகாரிகளுடனான கலந்துரையாடலிலேயே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கையில்...

தீவிர கண்காணிப்பு பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காளியம்மன்குண்டு பகுதியில் இருந்து கீழக்கரை பகுதிக்கு இரு சக்கர வாகனத்தில் கடத்தல் தங்கத்தை கடத்தியவரை பொலிஸார் பிடித்தனர். அவரிடம் இருந்து 14.8 கிலோ தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சீன...

விதமாக பெற்றோல், டீசல் லீற்றருக்கு 3 ரூபாய் விலை குறைப்பு செய்து வழங்கியதாக சினோபெக் லங்கா நிறுவனம் அறிவித்தது.

சினோபெக் நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயல்பாடுகள் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னதாக ஆரம்பமாகவுள்ளது. அத்துடன், மேலும் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை புதிதாக ஆரம்பிக்கவும் அந்த நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

சினோபெக் நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 20 வருடங்களுக்கு இலங்கையின் எரிபொருள் சந்தையில் செயல்பட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நெருக்கடியால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நாட்டின் எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோக சேவையை தனியார் மயப்படுத்த முடிவு எட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து, சீனா, அமெரிக்கா, அவுஸ்திரேலிய நாடுகள் இங்கு முதலீடுகளை ஆரம்பிக்க விரும்பின. ஒப்பந்தங்களை தொடர்ந்து சீனா தனது சேவையை ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வட,கிழக்கின்...

வலியுறுத்தினார் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் மேரிலான்ட் நகர செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வான் ஹொலனை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இதன்போது, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் உடனிருந்தார்.

இந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் சாள்ஸ் நிர்மலநாதன் எம். பி. தெரிவித்தவை வருமாறு,

“சந்திப்பில் பாராளுமன்ற நட்புறவு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. நான் 13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த போது சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை எதிர்க்கும் விதமான கருத்துகளை முன்வைத்தனர். இந்நிலையில் எமது நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக வன்னி பிரதேசத்துக்கு உட்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டம் ஊடாக சிங்கள மக்கள் குடியேற்றப்படும் விடயத்தை தெளிவுபடுத்தியிருந்தேன்.

போரின் பின்னர் 14 ஆயிரம் சிங்கள மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவற்றின் பின்னணியை மையப்படுத்தியே அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்தை முன்வைத்துள்ளேன். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கத்தால் அமைக்கப்படும் குழுக்கள் மீது நம்பிக்கை இல்லை எனவும் அதற்கான தீர்வை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.” - என்றார். (ஐ)

## பெற்றோல்...

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுதாபனம், லங்கா ஐ.ஓ.சி நிறுவனங்களின் அறிவிப்பின்படி, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 13 ரூபாயால் அதிகரித்து 361 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 42 ரூபாய் அதிகரித்து 417 ரூபாயாக விற்பனையாகவுள்ளது.

இதேவேளை, ஓட்டோ டீசல் லீற்றருக்கு விலை 35 ரூபாய் குறைக்கப் பட்டு 341 ரூபாயாகவும், சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை ஒரு ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 359 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 231 ரூபாயாக விற்பனையாகவுள்ளது. (ஐ)

## சட்டத்தரணி...

கொண்டு வந்தனர்.

மனிதப் புதைகுழி வழக்கு விசாரணைகளுடன் தொடர்புபட்ட சட்டத்தரணிகள் கடந்த 10ஆம் திகதி சம்பவ இடத்துக்கு சென்றபோது புலனாய்வு பிரிவினர் அவர்களை அச்சுறுத்தும் விதமாக செயல்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டது.

அங்கு சென்ற சட்டத்தரணிகளிடம், பல்வேறு தரப்பினரிடமும் விசாரித்ததோடு, அந்தப் பகுதியின் கிராம அலுவலரிடமும் அங்கு சென்ற சட்டத்தரணிகளின் பெயர், எங்கிருந்து வந்தார்கள் என்பது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்தனர். அத்துடன், அவர்களின் வாகன இலக்கங்களின் தகவல்களையும் திரட்டினர் என்றும் சட்டத்தரணிகள் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்த அச்சுறுத்தல் தொடர்பாக கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலரும் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்

இதன்போது, சட்டத்தரணியும் எம். பியுமான எம். ஏ. சுமந்திரன் புலனாய்வு பிரிவினர் என்பவர்கள் இரகசியமாக தகவல்களை பெற்றுக் கொள்பவர்கள். இவர்கள் வெளிப்படையாக வந்து விசாரணைகள் செய்வது என்பது அச்சுறுத்தல் என்று மன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த விடயமாக சட்டத்தரணிகளை முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யுமாறும் தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டு இருக்கின்றதன் அடிப்படையில் அதனை வைத்துக்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிபதி கொக்கிளாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ)

## காணாமல்...

முடியாத வேதனையை அனுபவித்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் திரும்புகின்றன.

இந்தத் தினம் இலங்கையில் ஆழமான பிரதிபலிப்புகளை கொண்டுள்ளது இங்கு பல வருடங்களாக பல குடும்பங்களும் சமூகங்களும் நிச்சயமற்ற தன்மை மற்றும் துயரத்தை எதிர்கொண்டுள்ளதுடன் பதில்கள் அற்ற கேள்விகளின் நிழல்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்படல் என்பது நாட்டின் வரலாற்றின் துயர்படிந்த கறையை விட்டுச்சென்றுள்ளது. நிச்சயமற்ற நிலையில் வாழும் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையை தீர்மானிக்கின்றது. அவர்களின் அன்புக்குரியவர்கள் இல்லாத - நிச்சயமாக இல்லை என கருதமுடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த தசாப்தத்தில் சிறிதளவு முன்னேற்றம்கூட ஏற்படாத நிலையில் தங்கள் அன்புக்குரியவர்களின் நிலையை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறிவதற்கு இலங்கையின் குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றனர். பதில்களுக்கான அவர்களின் தளர்ச்சியற்ற நீடித்த தேடல்கள் அவர்கள் மேலும் பழிவாங்கப்படும் - அச்சுறுத்தப்படும் - களங்கப்படுத்தப்படும் - சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது.

சமீப வருடங்களில் இலங்கை பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலின் பாரம்பரியத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2015 இல் ஐ. சி. பி. பி. ஈ. டி. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது - காணாமல் போனோர் தொடர்பான பணிமனையை ஏற்படுத்தியது - இவை மைல் கற்களாகும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து காணாமல் போனவர்கள் தொடர்பான பணிமனை பெற்றுள்ள- வெளியிட்டுள்ள முறைப்பாடுகள் நீதியை வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுக்கான எங்களின் அளவுகோல்களாக காணப்படுகின்றன.

எனினும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றுக்கான பாதிக்கப்பட்டோரின் உரிமை தொடர்பில் இன்னமும் அதிகளவு செயல்பாடுகள் அவசியமாக உள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் நிலை, அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என அறிந்துகொள்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். துயரத்தை எதிர்கொண்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டும் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உண்மையை நிலை நாட்டுவது பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் குடும்பத்தவர்களுக்கு மிகவும் அவசியமான விடயம். இதன் மூலம் மாத்திரமே காயங்களை ஆற்றும் நடவடிக்கை ஆரம்பமாக முடியும். நல்லி ணக்க செயல்பாடுகள் ஆரம்பமாக முடியும்.

ஐக்கிய நாடுகள் சபை வலிந்து காணாமல் ஆக்கப்படுதலால் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவை வெளியிடுவதுடன் உண்மை, நீதி நல்லிணக்கத்துக்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுள்ள போராட்டங்களுக்கும் தனது ஆதரவை வெளியிடுகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குறித்த பாரம்பரியத்திற்கு தீர்வை காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை முன்னேற்றம் பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் மிகவும் அவசியமானது - என்றுள்ளது. (அ- ஐ)

ஈழநாடு
Eelanadu

## ரணிலுக்கு ஆதரவளிக்க வடிவேல் சுரேஷ் தயார்!



கொழும்பு, செப். 01

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். அவர் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்குக் காணி உரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் ஒட்டு மொத்த மலையக மக்களுடன் அவருக்கு ஆதரவு வழங்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

அதேவேளை எனக்கு கட்சி முக்கியமில்லை. எனது மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களே முக்கியம் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

## மூன்று நாட்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு

கொழும்பு, செப். 01

நேற்று முதல் எதிர்வரும் 03 நாட்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு அபாயம் அதிகம் நிலவும் பகுதிகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

வீடுகள் தோறும் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டில் இதுவரை 61,697 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 30,147 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

28 பகுதிகள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்தியர் நளீன் ஆரியரத்ன கூறினார். (அ)

## வெதுப்பக உற்பத்தி பொருள் விலையில் மாற்றம் ஏற்படாது

கொழும்பு, செப். 01

கோதுமை மா இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திர முறைமை இரத்து செய்யப்பட்டு ஒரு கிலோகிராம் கோதுமை மாவுக்கான இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்டாலும் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையில் மாற்றம் எற்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என். கே ஜயவர்தன இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோதுமை பயிரை இறக்குமதி செய்யும் போது, 6 ரூபா வரி விதிக்கப்பட்டாலும், அது வெதுப்பக உற்பத்திகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என அவர் குறிப்பிட்டார்.

பாரியளவில், கோதுமையை சந்தைப்படுத்தும் இரண்டு நிறுவனங்களின் நன்மைக்காக அரசாங்கம் கோதுமை மா இறக்குமதி அனுமதி பத்திர முறைமை அறிமுகப்படுத்தியது.

அந்த நிறுவனங்கள் கோதுமை பயிரையே இறக்குமதி செய்தன.

அதன்போது, கோதுமை பயிர் இறக்குமதிக்காக 3 ரூபா வரி அறிவிடப்பட்டது.

தற்போது அது 6 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

எது எவ்வாறாயினும் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை குறைக்கப்படமாட்டாது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன தெரிவித்தார். (அ)

# இராணுவ உறவுகளை வலுப்படுத்தவே இந்திய பாதுகாப்பு அமைச்சர் வருகிறார்

கொழும்பு, செப்ரெம்பர் 01

**இந்து சமுத்திர பிராந்தியத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதற்காக இருதரப்பு இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் நிலையில், இலங்கை துறைமுகங்களில் கடற்படை கப்பல்கள் மற்றும் உளவுக் கப்பல்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் ரைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 2, 3 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆயுதப் படையினரின் திறனை விருத்தி செய்வதற்கு இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும், இதற்கமைய இலங்கைக்கான 150 மில்லியன் டொலர் பாதுகாப்பு கடன் வசதியை இந்தியா நீடித்துள்ளதாகவும் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவின் போர்க்கப்பலான ஹாய் யங் 24 ஹோ இந்த மாத தொடக்கத்தில் கொழும்பில் நங்கூரமிடப்பட்ட நிலையில், இந்திய பாதுகாப்பு அமைச்சரின் இந்த விஜயம் அமைந்துள்ளது.

சீன ஆய்வுக் கப்பலான ஷீ யான் 6 எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆதிவாசிகளின் தலைவரை சந்தித்தார் ஆஸி. தூதுவர்!





கொழும்பு, செப். 01

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபென்ஸ் நேற்று தம்பானே ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியல அத்தோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளார்.

இலங்கையின் ஆதிவாசிகளின் வரலாறு, அவர்கள் தற்போது எதிர் நோக்கும் சவால்கள் குறித்து தூது வர் கவனம் செலுத்தியுள்ளார்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊரு வரிகே வன்னியல அத்தோ உட்பட ஆதிவாசி சமூகத்தை சந்தித்து, அவர்களின் வரலாறு, தற்போ தைய சவால்கள் குறித்து கவனம் செலுத்த கிடைத்தமை கௌரவம் என தூதுவர் தனது ருவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நிரந்தர வாழ்வாதாரத்தை உரு வாக்கிக்கொள்வது, கலாசாரம் மற் றும் நாட்டுடன் சம்பந்தப்பட்டு அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை அவுஸ்திரேலியாவின் ஆதி குடிகளின் அனுபவத்துடன் ஒற்றுமைகளை காண்கின்றேன் எனவும் தூதுவர் மேலும் கூறியுள்ளார்.

# சுற்றிவளைப்பிற்கு சென்ற பொலிஸார் மீது தாக்குதல்

கொழும்பு, செப். 01

பதுளை - எல்ல கொடுவல பகுதியில் போதைப் பொருள் சுற்றிவளைப்பை மேற்கொள்ளச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படை யில், ஐஸ் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரை கைது செய்வதற்காக எல்ல பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று நேற்று அதிகாலை சுற்றிவ ளைப்பை மேற்கொண்டது.

சுற்றிவளைப்பிற்குச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையே சந்தேகநபர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்க ளும் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஐஸ் போதைப் பொருள், கைக்குண்டு, கத்தி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது!

கொழும்பு, செப். 01

நோர்வூட் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேர் காவல்துறையினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைதானவர்கள் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்த 16, 20 மற்றும் 23 வயதுடையவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த 3 பேரையும், எதிர்வரும் 4 ஆம் திகதி ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்து பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஆஸி. அணி மிகப்பெரிய வெற்றி!

டர்பன், செப். 01

முதல் இருபது - 20 போட்டியில் அவுஸ்திரேலியா 226 ஓட்டங்கள் விளாசியதுடன், தென்னாபிரிக்காவை 115 ஓட்டங்களுக்கு சுருட்டி மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள அவுஸ்திரேலியா 3 இருபது - 20, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுகிறது.

இதில், முதல் இருபது - 20 போட்டி டர்பன் நகரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியில் ஸ்பென்சர் ஜோன்சன், அரோன் ஹார்டி, மேத் ஷோர்ட் ஆகியோர் அறிமுகமாகினர்.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித் தலைவர் பவுமா முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தார். இதனையடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியில் தொடக்க வீரர்கள் ஹெட் மற்றும் மேத் ஷோர்ட் விரைவில் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மிட்செல் மார்ஷ் தென்னாபிரிக்க பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். மறுமுனையில் ஜோஷ் இங்லிஸ் மற்றும் ஸ்ரொய்னிஸ் விரைவில் ஆட்டம் இழந்தனர்.

அவர்களுக்கு பின் களம் இறங்கிய ரிம் டேவிட் மிட்செல் மார்ஷுடன் கை கோர்த்து தெனனாபிரிக்க பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்தார். இதனால், அணியின் ஓட்டவிகிதம் அதிவேகத்தில் எகிறியது. இருவரும் அரைச் சதம் அடித்து அசத்தினர். ரிம் டேவிட் 28 பந்துகளில் 64 ஓட்டங்களை குவித்து பிடியெடுப்பு மூலமாக ஆட்டமிழந்தார்.

இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்த மிட்செல் மார்ஷ் 49 பந்துகளில் 92 ஓட்டங்களை குவித்தார். 20 ஓவர் முடிவில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 226 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 227 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களம் இறங்கிய தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலிய வீரர்களின் சிறப்பான பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்களை வேகமாக பறிகொடுத்தனர். தென்னாபிரிக்க அணி தரப்பில் தொடக்க ஆட்டக்காரர் ரீசா ஹென்ட்ரிக்ஸ் மட்டுமே நிலைத்து விளையாடினார். அரைச்சதம் அடித்த அவர் 43 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

எதிர்பார்க்கப்பட்ட பேபி ஏ.பிடி என்று அழைக்கப்படும் டெவால்ட் ப்ரீவிஸ் 5 ஓட்டங்களில் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தார்.

15.3 ஓவர்கள் மட்டுமே தாக்குபிடித்த தென்னாபிரிக்க அணி 115 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதனால் 111 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய அணி தரப்பில் தன்வீர் சங்கா 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

மிட்செல் மார்ஷ் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். (ஐ)

*ஆசிய கிண்ண தொடர்:*

# நேபாளம் அணிக்கு எதிராக பாகிஸ்தான் இமாலய வெற்றி!

முல்தான், செப். 01

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேபாள அணிக்கு எதிரான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 342 ஓட்டங்கள் குவித்தது.

பாகிஸ்தானின் முல்தான் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது பாகிஸ்தான். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 342 ஓட்டங்களை குவித்தது. அந்த அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. 6 ஓவர்களில் 25 ஓட்டங்களை சேர்ப்பதற்குள் 2 விக்கெட்களை பறிகொடுத்தது.

பஹர் ஷமான் 14, இமாம் உல் ஹக் 5 ஓட்டங்களில் வெளியேறினர். இதையடுத்து களமிறங்கிய முகமது ரிஸ்வான், அணித்தலைவர் பாபர் அஸாமுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். ரிஸ்வான் 50 பந்துகளில், 6 பௌண்ட்ரிகளுடன் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆனார்.

தொடர்ந்து களமிறங்கிய அஹா சல்மான் 5 ஓட்டங்களில் வெளியேறினார். 5ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய இப்திகார் அகமது அதிரடியாக விளையாடினார். நிதானமாக துடுப்பெடுத்தாடிய பாபர் அஸம் 109 பந்துகளில், 10 பௌண்ட்ரிகளுடன் தனது 19ஆவது சதத்தை நிறைவு செய்தார்.

சிறப்பாக விளையாடி வந்த அவர், 131 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 14 பௌண்ட்ரிகளுடன் 151 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சோம்பால் கமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தனது முதல் சதத்தை விளாசிய இப்திகார்



அமகது 71 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் 109 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து 343 ஓட்டங்கள் இலக்குடன் நேபாளம் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

23.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 104 ஓட்டங்களை எடுத்து தோல்வியை தழுவியது நேபாளம். பாகிஸ்தான் 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

நேபாளம் அணிக்காக சோம்பால் கமி 28, ஆரிப் செய்க் 26 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். (ஐ)

## ஆஸியின் ஒருநாள் அணியில் ரிம் டேவிட் இணைக்கப்பட்டார்

சிட்னி, செப். 01

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் ரிம் டேவிட் அவுஸ்திரேலிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் சென்றுள்ளது அவுஸ்திரேலிய அணி.

அங்கு 3 இருபது - 20 போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் விளையாடவுள்ளன.

எதிர்வரும் 7ஆம் திகதி இரு அணிகளுக்கும் இடையே 5 போட்டிகள் கொண்ட 50 ஓவர் தொடர் ஆரம்பமாகவுள்ளது. 50 ஓவர் தொடரில் காயத்தால் பல முன்னணி வீரர்கள் விலகிய நிலையில் இருபது -20 போட்டிகளில் சிறந்த வீரரான அவுஸ்திரேலியாவின் ரிம் டேவிட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

50 ஓவர் போட்டிகளில் ரிம் டேவிட் அணியில் சேர்க்கப்படுவது இதுவே முதல் முறை.

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது இருபது -20 போட்டியில் அதிரடியாக விளையாடி 28 பந்துகளில் 64 ஓட்டங்கள் குவித்திருந்தமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது. (ஐ)





## குறைந்த இன்னிங்ஸில் சதம் பாபர் அஸாம் புதிய சாதனை

முல்தான், செப். 01

102 ஒருநாள் இன்னிங்ஸ் விளையாடி 19 சதங்கள் பதிவு செய்துள்ளார் பாகிஸ்தானின் பாபர் அஸாம். இதன் மூலம் குறைந்த இன்னிங்ஸ்களில் விளையாடி 19 சதங்களை பதிவு செய்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் அவர்.

ஆசியக் கிண்ணத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில், முதல் போட்டியில் நேபாளம் அணியை பாகிஸ்தான் எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் 238 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வென்றுள்ளது. 131 பந்துகளை எதிர்கொண்ட பாபர் அஸாம், 151 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். இந்த சதம் ஒருநாள் கிரிக்கெட்டில் அவரின் 19ஆவது சதகமாக அமைந்தது. 102 ஒருநாள் இன்னிங்ஸ்களில் ஆடி 19 சதங்களை பதிவு செய்ததன் மூலம் அவர் சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் குறைந்த இன்னிங்ஸ்களில் 19 சதங்களை குவித்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை அவர் பிடித்துள்ளார். பாபர் அஸம் - 102 இன்னிங்ஸ், ஹசீம் அம்லா - 104 இன்னிங்ஸ், விராட் கோலி - 124 இன்னிங்ஸ், டேவிட் வோர்ணர் - 139 இன்னிங்ஸ், ஏபி டி வில்லியர்ஸ் - 171 இன்னிங்ஸ் (ஐ)

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்; ஜொகோவிச் 3ஆவது சுற்றில்!

நியூயோர்க், ஓக. 01

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சேர்பிய வீரரான ஜொகோவிச் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்குபெறும் இந்தத் தொடரில், நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆம் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பியனும் ரென்னிஸ் தரவரிசையில் முதல் நிலை வீரருமான சேர்பிய வீரர் நோவக் ஜொகோவிச் ஸ்பெயின் வீரரான பெர்னாப் ஐபடா மிரல்லெஸ் உடன் மோதினார்.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜொகோவிச் எளிதில் வெற்றி பெற்றார். ஒரு மணி நேரம் 59 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் ஜொகோவிச் 6-4, 6-1 மற்றும் 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். அவர் 3ஆவது சுற்று போட்டியில் சக நாட்டவரான லாஸ்லோ டிஜெரே உடன் விளையாட உள்ளார். (ஐ)




# சந்திரயான்-3: நிலவின் தென் துருவத்தில் ஒட்சிசன் கண்டுபிடிப்பு: மனிதன் சுவாசிக்க முடியுமா?

சந்திரயான்-3 திட்டத்தின் முதலிரு இலக்Ffis Vw;fdNt vl;btpl;l ,];Nuh> %d;whtது இலக்கில் அடுத்தக்கட்ட தகவல்களை பகிர்ந்துள்ளது. நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து ஆய்வு செய்யும் பிரக்யான் ரோவர் ஆக்சிஜன், கந்தகம் உள்ளிட்ட சில தனிமங்கள் இருப்பதை உறுதிப்படுத்தி இருப்பதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. அங்கே ஹைட்ரஜன் உள்ளதா என்பது இன்னும் தெரியவரவில்லை.

இஸ்ரோவின் இந்த புதிய கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் என்ன? நிலவில் குடியேற்றங்கள் அல்லது விண்வெளி தளம் அமைப்பதற்கான மனித குலத்தின் கனவை நனவாக்க இது உதவுமா? அதற்கு இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

**நிலா ஆய்வில் சரித்திரம் படைத்த இஸ்ரோ**

விண்வெளி ஆராய்ச்சியில் ஆகஸ்ட் 23-ம் தேதி இஸ்ரோ சரித்திர சாதனை படைத்தது. அன்றைய தினம், அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், சீனா ஆகியவற்றை விஞ்சி, நிலவின் தென் துருவப் பகுதியில் முதல் நாடாக இந்தியாவை தடம் பதிக்கச் செய்தது இஸ்ரோ.



அன்று மாலை 6.04 மணிக்கு திட்டமிட்டபடி நிலவில் கால் பதித்த விக்ரம் லேண்டரும், அதில் இருந்து நிலாவில் தரையிறங்கி ஊர்ந்து சென்ற பிரக்யான் ரோவரும் கச்சிதமாக தங்களது பணியை செவ்வனே செய்து வருவதை இஸ்ரோ ஏற்கனவே உறுதி செய்தது.

நிலவின் தென் துருவத்தில் தரையிறங்குவது, நிலவின் மேற்பரப்பில் ரோவர் நகர்ந்து செல்வது ஆகிய 2 இலக்குகளை அடைந்துவிட்டதாகவும், மூன்றாவது இலக்கை நோக்கி நடை போடுவதாகவும் இஸ்ரோ கூறியிருந்தது. அதன் தொடர்ச்சியாக, மூன்றாவது இலக்கை எட்டுவது குறித்த புதிய தகவல்களை இஸ்ரோ அடுத்தடுத்து வெளியிட்டு வருகிறது.

**நிலவின் தென் துருவத்தில் வெப்பநிலை என்ன?**

விக்ரம் லேண்டரில் உள்ள ChaSTE கருவியில் இருந்து முதல் கட்ட தரவுகளை இஸ்ரோ தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்தது.

ChaSTE கருவி சந்திரனின் மேற்பரப்பில் உள்ள வெப்பநிலை எப்படி இருக்கும் என்பதை புரிந்து கொள்ள, தென் துருவத்தைச் சுற்றியுள்ள நிலவின் மேற்பரப்பில் உள்ள மண்ணின் வெப்பநிலையை அளவிடுகிறது.

அதில் உள்ள வெப்பநிலையை அளவிடும் சாதனம் மேற்பரப்புக்கு கீழே 10 செ.மீ. அடியில் ஊடுருவிச் செல்லும் திறன் கொண்டது. அதில் வெப்பநிலையை அளவிடும் 10 சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**பள்ளத்தை லாவகமாக தவிர்த்த பிரக்யான் ரோவர்**

சந்திரயான் -3 நிலாவில் தரையிறங்கியதில் இருந்து வெற்றிகரமாக செயல்பட்டு வரும் நிலையில், ஆகஸ்ட் 27 விண்கலத்தின் பிரக்யான் ரோவர் பயணித்த பாதையில் பெரும் பள்ளத்தை உணர்ந்துள்ளது.

பாதுகாப்பான இடத்தில் இருந்து அந்தப் பள்ளத்தை உணர்ந்ததால், இஸ்ரோ விஞ்ஞானிகள் ரோவரின்




பாதையை மாற்றியமைத்துள்ளனர். அதன்படி, தற்போது ரோவர் புதிய பாதையில் சீராகப் பயணிப்பதாக இஸ்ரோ தனது சமூக ஊடக பக்கத்தில் தெரிவித்துள்ளது.

முன்னதாக சந்திரயான்-3 திட்டத்தின் மூன்று இலக்குகளில் இரண்டை எட்டிவிட்டதாக இஸ்ரோ தெரிவித்திருந்தது. அதேபோல, நிலாவின் தென் துருவத்தில் உள்ள வெப்பநிலை குறித்து விக்ரம் லேண்டரில் உள்ள ChaSTE என்ற கருவி அனுப்பிய தகவல்களையும் இஸ்ரோ பகிர்ந்திருந்தது.

**நிலவில் உள்ள தனிமங்கள் என்ன? - இஸ்ரோ கண்டுபிடிப்பு**

இஸ்ரோ தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் எக்ஸ் பக்கத்தில் இதுதொடர்பாக ட்வீட் செய்துள்ளது. அதன்படி, நிலவில் ஊர்ந்து சென்று ஆய்வு நடத்தும் பிரக்யான் ரோவரில் உள்ள லேசரில் செயல்படும் ஸ்பெக்ட்ரோஸ்கோப் (LIBS) கருவி அங்கே கந்தகம் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது, நிலவின் மேற்பரப்பில் தென் துருவத்திற்கு அருகே கந்தகம் இருப்பதை உறுதி செய்த முதல் அறிவியல் ஆய்வு இதுவாகும்.



அத்துடன், எதிர்பார்க்கப்பட்டபடியே அலுமினியம், கால்சியம், இரும்பு, குரோமியம், டைட்டானியம், மாங்கனிசு, சிலிகான், ஆக்சிஜன் ஆகியவை இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. அங்கே ஹைட்ரஜன் இருக்கிறதா? என்பதை கண்டறியும் ஆய்வு தொடர்ந்து நடப்பதாக இஸ்ரோ கூறியுள்ளது.

**இஸ்ரோ கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் என்ன?**

நிலவின் தென் துருவப் பகுதியில் உள்ள தனிமங்கள் தொடர்பான சந்திரயான்-3 விண்கலம் கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் குறித்து மத்திய அரசின் விஞ்ஞான் பிரசார் அமைப்பில் பணியாற்றும் முதுநிலை விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரனிடம் கேட்டோம்.

‘நிலவில் ஆக்சிஜன், கந்தகம், இரும்பு உள்ளிட்ட தனிமங்களின் இருப்பை சந்திரயான்-3 விண்கலம் உறு திப்படுத்தியுள்ளது. பிரக்யான் ரோவர் மண்ணை அகழ்ந்து ஆய்வு செய்து இதனை உறுதி செய்திருக்கிறது. அதற்காக அந்த தனிமங்கள் நிலவில் அப்படியே தனித்து இருப்பதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. அந்த தனிமங் கள் நிலவில் எந்த வடிவிலும் இருக்கலாம்.

அதாவது, ஆக்சிஜன் என்பது ஆக்சைடு வடிவத்திலோ அல்லது வேறு ஏதேனும் ரூபத்திலோ இருக்கலாம். அதேபோல்தான், இரும்பு, கந்தகம் போன்ற பிற தனிமங் களும் இருக்கக் கூடும். அது குறித்து கிடைத்துள்ள தரவுகளை இஸ்ரோ இனிவரும் நாட்களில் பகுப்பாய்வு செய்து முடிவுகளை வெளியிடும்.

ஹைட்ரஜன் இருக்கிறதா என்பதை கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடர்கின்றன. அதுவும் கூட, ஹைட்ராக்சைடு போன்ற ஏதோ ஒரு வடிவில் இருக்கக் கூடும். அடுத்து வரும் நாட்களில் அதுகுறித்த தகவல்கள் பிரக்யான் ரோவருக்கு கிடைக்கக் கூடும்.” என்று அவர் கூறினார்.



**நிலவில் மனித குடியேற்றங்கள் சாத்தியமா?**

தற்போதைய கண்டுபிடிப்புகள் நிலவில் குடியேறுவது, விண்வெளி ஆராய்ச்சிக்கான தளமாக நிலவை உருவாக்குவது போன்ற மனித குலத்தின் கனவுகளை நனவாக்க எந்த அளவுக்கு உதவக் கூடும் என்று அவரிடம் கேட்டோம். அதற்குப் பதிலளித்த அவர், ‘நிலவில் ஆக்சிஜன் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஹைட்ரஜன் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஒருவேளை இரண்டும் இருந்தாலும் அவை எந்த வடிவில் இருக்கும் என்பது இன்னும் உறுதியாகவில்லை.

இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்-1 விண்கலம் நிலவில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை எடுத்துக் கூறியுள்ளது. அது நிரூபணமானால், ஏதோ ஒரு வடிவில் தண்ணீர் கிடைத்தால் அது மிகப்பெரிய கண்டுபிடிப்பாக இருக்கும். மனித குலத்திற்கே ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். ஏனெனில், தண்ணீரில் இருந்து ஹைட்ரஜன், ஆக்சிஜன் ஆகிய இரண்டையும் பிரித்து நாம் சுவாசிக்க, நமது விண்கலன்களுக்கு எரிபொருளாக என பல விதங்களிலும் அவற்றைப் பயன்படுத்தலாம். அந்த நிலையை எட்டினால்தான், நிலவில் மனித குடியேற்றங்கள் அல்லது விண்வெளித்தளம் அமைப்பது சாத்தியமாகும். தற்போதைய நிலையில் அதுகுறித்து ஏதும் உறுதியாக கூற முடியாது.” என்று தெரிவித்தார். ●

# இந்தியா - சீனாவின் உறுதியான பொருளாதார வளர்ச்சியால் புதிய பிரிக்ஸ் நாணயம் உருவாக சாத்தியமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பிரிக்ஸ் புதிய கரன்சியை வெளியிடுவது குறித்து 44 நாடுகள் ஆதரவு என்று தகவல்கள் தற்போது தெரிவிக்கின்றன. அமெரிக்க டொலருக்கு பதிலாக புதிய பிரிக்ஸ் நாணயத்தை (BRICS Currency) வெளியிடப் போவதாக ரஷ்யா நீண்ட காலத்திற்கு முன்னர் அறிவித்துள்ளது.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு தென்னாப்பிரிக்காவில் கடந்த வாரம் தொடங்கியது. பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட 'பிரிக்ஸ்' கூட்டமைப்பின் மாநாடு ஜோகன்னஸ்பர்கில் செவ்வாய்க்கிழமை தொடங்கி 24-ஆம் தேதி வரை நடைபெற்றது.

தென்னாபிரிக்க பிரிக்ஸ் உச்சி மாநாடு சந்திப்பில் ரஷ்ய நாடு டாலருக்கு எதிரான போக்கை வலுப்படுத்தும் என்பது உறுதி. 44 நாடுகள் எதிர்கால BRICS நாணயத்தைப் பயன்படுத்தும் என்று ரஷ்யா நம்புகிறது. ஆயினும் இந்த பிரிக்ஸ் நாடுகளின் தென்னாப்பிரிக்க உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரிக்ஸ் தொடர்ந்து வலுப்பெறுமா?**

பிரிக்ஸ் நாடுகள் 2009லிருந்து உச்சி மாநாடுகளை நடத்தி வருகின்றன. பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜூலை 2018ல் நடைபெற்றது. உள்ளக வளர்ச்சி, வாணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சிமாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.







பிரிக்ஸ் நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 21 சதவீதம் பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் உலக புனீல் தனது பங்கினை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உலக மக்கள் தொகையில் பிரிக்ஸ் நாடுகள் 43 சதவீதத்தை இருப்பிடமாக கொண்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் அமெரிக்க டாலரை முறியடிக்க பிரிக்ஸ் நாணயம் அறிமுகப்படுத்த 44 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆயினும் இந்திய - சீனாவின் பொருளாதார வகிபாகம் மிக வலுமிக்க உறுதியாகவும் இருப்பதால், ரஷ்யாவின் வேண்டுதலுக்கு ஏற்ப, அமெரிக்க டாலருக்கு நிகரான நாணயத்தை அறிமுகம் செய்யும் சாத்தியக் கூறுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன

**பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு:**

இந்த மாநாட்டின்போது இந்தியப் பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் இடையிலான நேரடி சந்திப்பு நடைபெற்றது. பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கு தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா வழங்கிய இரவு விருந்திலும் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.




இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஷி ஜின்பிங்கும் நேரடியாக சந்தித்துப் பேசினர். சாமர்கண்டில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிலும், பாலி ஜி20 மாநாட்டிலும் இருவரும் நேருக்கு நேர் சந்தித்தனர் என்றாலும், அதில் பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை.

ஜோகன்னஸ்பர்க் நகரில் நேரடியாக சந்தித்துப் பேசி, 2020 கல்வான் தாக்குதலுக்குப் பிறகு இரு தலைவர்களும் சந்திக்கும் நிகழ்வாக இது இருக்கிறது. இந்த மாநாட் டுக்கு இடையே சீன அதிபர் ஜி ஜின்பிங்கை, பிரதமர் மோடி சந்தித்து பேசி, எல்லை பிரச்னைகளுக்கு சுமுக தீர்வு காண்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகருக்கு சென்ற வேளையில் அங்கு உள்ள வாட்டர்க்ளூஃப் விமானப் படை தளத்தில் தரையிறங்கிய மோடிக்கு அரசு மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தென்னாப்பிரிக்க துணை அதிபர் பால் ஷிபோகோசா மஷாடைல் அவரை வரவேற்றார்.

**இந்தியாவின் எதிர்கால ஒத்துழைப்பு:**

ஜோகன்னஸ்பர்க்கில் பிரிக்ஸ் வர்த்தக அமைப்பின் தலைவர்கள் பங்கேற்ற கலந்துரையாடல், பிரிக்ஸ் தலைவர்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். பிரிக்ஸ் அமைப்பை விரிவுபடுத்தி, ஈரான், வங்கதேசம் ஆகிய நாடுகளையும் உறுப்பினர்களாக சேர்ப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.



தென்னாப்பிரிக்க பயணத்துக்கு முன்பு, செய்தியாளர்களிடம் பிரதமர் மோடி கூறுகையில், எதிர்காலத்தில் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டிய துறைகள் மற் றும் அமைப்பு சார்ந்த வளர்ச்சியை மறுஆய்வு செய்ய பிரிக்ஸ் உச்சி மாநாடு பயனுள்ள வாய்ப்பை வழங்கும். வளர்ச்சியின் தேவைகள், பன்முக அமைப்புகளின் சீர்தி ருத்தம் உட்படதெற்கத்திய நாடுகள் சந்திக்கும் பிரச்னை கள் குறித்து ஆலோசிப்பதற்கான தளமாக பிரிக்ஸ் அமைப்பை நாங்கள் கருதுகிறோம். இந்த உச்சிமாநாட் டில் பங்கேற்கும் தலைவர்களுடன் கலந்துரையாட ஆவலாக உள்ளேன்.

மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறும் பிரிக்ஸ் - ஆபிரிக்கா மக்கள் தொடர்பு மற்றும் பிரிக்ஸ் பிளஸ் உரையாடல் நிகழ்விலும் பங்கேற்கிறேன். பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாட உள்ளேன். ஜோகன்னஸ்பர்க்கில் சில தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவதையும் எதிர்நோக்கியுள்ளேன் என மோடி தெரிவித்தார்.

இம்மாநாட்டில் முதல் நிகழ்வாக பிரிக்ஸ் தொழில் துறை குழுமத் தலைவர்களுடனான கருத்தரங்கு நடைபெற்றது. தற்போது பல்வேறு துறைகளில் பிரிக்ஸ் நாடு களுக்கு இடையேயான ஒத்துழைப்பு வலுவடைந்துள்ளது. தெற்குலகின் பிரச்னைகளை விவாதிக்கும் முக்கியத் தளமாக பிரிக்ஸ் மாறியுள்ளது. தெற்குலக நாடுகளின் வளர்ச்சி, பன்னாட்டு அமைப்புகளின் சீர்திருத்தங்கள் உள்ளிட்டவை குறித்தும் பிரிக்ஸ் மாநாடுகளில் விவாதிக் கப்பட்டது.

**புதிய நாடுகள் இணைவு:**

பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளுக்கு இடையே எதிர் காலத்தில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற் கான வழிகளை ஆராய்வதற்கு ஜோகன்னஸ்பர்க் மாநாடு வலிகோலியது. பிரிக்ஸ் கூட்டமைப்பில் சீர்திருத்தங்களைப் புகுத்துவது தொடர்பாகவும் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேலும் பல நாடுகளை இணைத்துக் கொள்வதாக இந்த மாநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆர்ஜென்டீனா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், கியூபா, எத்தியோப்பியா, துருக்கி உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட நாடுகள் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது

உலக வங்கி மற்றும் அனைத்துலக நாணய நிதியம் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு நிகரான செல்வாக்கு கொண்ட அபிவிருத்தி வங்கி ஒன்றை உருவாக்குவது உட்பட முக்கியமான பல விஷயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக பொருளாதார வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஷ் தென்னாப்பிரிக்காவில் கூடின.

வேகமாக வளர்ந்துவரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப்பெயர் பிரிக்ஸ் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவையே அந்த ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகள்.

பிரிக்ஸ் நாடுகள் இணைந்து சுமார் 4.4. டிரில்லியன் டாலர்கள் அன்னிய இருப்பை பெற்றுள்ளது. சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்ஸின் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. இதன் உறுப்பினர் நாட்டு அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி என்ற வங்கியை தொடங்கியுள்ளார்கள். இதற்கு புதிய மேம்பாட்டு வங்கி என்ற பெயரும் உண்டு.

தென்னாப்பிரிக்காவில் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் அமெரிக்க டாலரை முறியடிக்க பிரிக்ஸ் நாணயம் அறிமுகப்படுத்த 44 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆயினும் இந்திய - சீனாவின் பொருளாதார வகிபாகம் மிக வலுமிக்க உறுதியாகவும் இருப்பதால், ரஷ்யாவின் வேண்டுதலுக்கு ஏற்ப, அமெரிக்க டாலருக்கு நிகரான நாணயத்தை அறிமுகம் செய்யும் சாத்தியக் கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றன. ●

# அரச இலக்கிய விழாவுக்கான ஆரம்ப போட்டி அம்பாறையில்



அம்பாறை, ஓக. 31

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற 20 அரச விழாக்களுள் அரச இலக்கிய விழாவிற்கான ஆரம்ப கட்டப் போட்டிகள் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் மொழி மூலமான பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் பிரதேச கவிதை பாடல் போட்டி, கையெழுத்து பிரதியாக்கப் போட்டி, சிறுகதைப் போட்டி ஆகிய போட்டிகளில் போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்காக மாவட்ட செயலாளர் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் ஆகியோரது வழிகாட்டலில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்ஸானின் மேற்பார்வையில் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தற்சமயம் மேற்படி பிரயோகக் கலைகளுக்கான தெரிவுகள் இடம் பெற்று வருகின்றன.

அட்டாளைச்சேனை, காரைதீவு, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, கல்முனை வடக்கு, நாவிதன் வெளி, சம்மாந்துறை, இறக்காமம், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோயில், பொத்துவில் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்படி போட்டிகள் தற்போது நிறைவடைந்த நிலையில், மாவட்ட மட்ட தெரிவுக்கான போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி நடைபெற ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தரமான மருந்துகள் இறக்குமதிக்கு அமெரிக்க உதவியை நாடும் இலங்கை!

கொழும்பு, செப். 01

எதிர்காலத்தில் மருந்துகளை இறக்குமதி செய்வது மற்றும் ஒழுங்குபடுத்துவது தொடர்பாக அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் ஆலோசனையை இலங்கை பெறும் என தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் எஸ். டி. ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்வது மற்றும் ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்க நிறுவனம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த அறிவை மருந்தாளர்கள் பயன்படுத்தி எதிர்காலத்தில் தரம் குறைந்த மருந்துகளின் உற்பத்தியைக் குறைப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# 3,000 வெளிநாட்டு சிகரெட்களை கடத்திய நபர் கொழும்பில் கைது!

கொழும்பு, செப். 01

கொழும்பு - பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் பொலிஸாருடன் இணைந்து கடற்படை நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில் 3,000 வெளிநாட்டு சிகரெட்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்றை கைப்பற்றியதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படைக்கு கிடைத்த தகவலின்படி, கரையோர பொலிஸாருடன் இணைந்து கொழும்பு - பஞ்சிகாவத்தை பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சிகாவத்தை சந்தியில் வீதியில் பயணித்த சந்தேகத்துக்கிடமான வான் ஒன்றை சோதனையிட்டபோது அதில் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட 3,000 வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# மசாஜுக்கு வந்த பெண்ணை வன்புணர்ந்த சந்தேகநபர் கைது!

பொத்துவில், செப். 01

பொத்துவில் சுற்றுலா பிரதேசத்திலுள்ள மசாஜ் செய்வதற்காக நிலையம் ஒன்றுக்கு சென்ற 23 வயது இஸ்ரேலிய யுவதியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை பொத்துவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட குறித்த யுவதி பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகள் நடத்தப்பட்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

வெலிகமை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மசாஜ் நிலையத்தில் சிகிச்சையாளராக கடமையாற்றி வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

